# தென்றல்

விலை 16 புதிய காசுகள்

~ ஆசிரியர்: கண்ணதாசன் ~

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, சித்திரை 12 (25-4-'59). சனிக்கிழமை | இதழ் 45


# காலிகள் தாக்கியும்

''ஓட்டுக்குப் பத்து ரூபாய்!''

''ஓடி ஆடிப் பாடுபட்டாலும் உனக்குக் கிடைக்காது ஐந்து ரூபாய் கூட! பத்து ரூபாய் தானேவருகிறது. ராஜபோகமாய் வாழலாம்!''

''பெற்றுக்கொள்! இம்...இதோ... போனால் வராது;எலக்ஷன் போனால், இந்தப் பணம் வராது''


ஆசை மொழிகள் - காசு வலைகள் விரிந்தன; பயனில்லை!

''காசை வாங்கமாட்டேன் என்கிறாயா? கழகத்திற்குத்தான் உழைப்பேன் என்கிறாயா? அவ்வளவு ஆணவமா,உனக்கு? 'பணம் வேண்டாம்; கொள்கைப்பணி போதும்' என்கிறாயா? வாழத் தெரியாதவனே! சினத்தைக் கிளறுகிறாய்; கோபத்தை வளர்க்கிறாய்; அழிந்துபடுவாய்! சாலையோரத்திலே குடிசை கட்டிக்கொண்டு கிடக்கும் நீ, இத்தனை நாள் தப்பியிருக்கிறாய் என்றால், அது எங்கள் தயவால்தான்! கடைசி எச்சரிக்கை; கழகத்திற்கு உழைப்பதை நிறுத்திவிடு!''

'உனது உழைப்பும் வாக்கும் எங்களுக்கு தரப்படாவிடின், தரைமட்டமாக்கி விடுவோம், உன்



7-4-59 மாலை காங்கிரஸ்காரர்களின் வெறித் தாக்குதலுக்குப் பலியான குடிசை.



காங்கிரஸ் கூலிகளால் 6-4-59 காலை தாக்குதலுக்கு ஆளாகிக் கைமுறிந்த தோழர் ஆறுமுகமும் மற்றொருவரும்.

குடிசையை. தகர்த்தெறிந்திடுவோம் உன் மண்டையை! எச்சரிக்கை! இறுதி எச்சரிக்கை!''

ஆணவ முடிக்கேறி நின்ற வெறிக் கூத்துக்காரர்கள், வார்த்தைகளை உருட்டியும் பயனில்லை. அணி அணியாகத் திரண்ட ஏழைமக்கள்,அழிந்துபட்ட திராவிடத்திற்குப் புதுவாழ்வு காணும் ஆற்றலுடைய பாட்டாளிகள் கழகக் கொடியேந்தினர்; கடமை ஒன்றே மூச்சாய்க்கொண்டனர். எனினும், உருட்டி மிரட்டியே ஊராண்டு பழகிவிட்ட ''பிரபுக்கள்'' சீறிவிட்டனர்.

''அலமேலுவுக்கு என்ன அவ்வளவு செல்வாக்கு? தி. மு. கழக அபேட்சகர் என்பதாலா? தி. மு. கழகம் அத்துணைப் பெரிய ஆற்றல உள்ள இயக்கமா? அழித்துக்காட்டுகிறேன் பார்!'' என்று கிளம்பிவிட்டனர், சென்னையில் திரிகின்ற சில மாட்டுக்காரர்கள்.

''ஊரார் பயிரை மேயும் மாடு வேண்டாம்! உலகுக்குதவும் உதய சூரியனே போதும்!' என்று உரைத்தோரை உருத்தெரியாமல் அழித்து

— 5-ம் பக்கம் —

# கழகம் வென்றது!

# சரித்திரப் புரட்டர்களின்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களிலே இழைந்துள்ள வரலாற்றுச் செறிவையும், அனுபவ உண்மைகளையும். மாற்றார் நம் மறை முகமாகவோ மனதிற்குள்ளாகவோ பாராட்டிக்கொள்ளும் நிலையையும் தமிழ்நாட்டு அரசியலில் சுயமான சிந்தனையறிவை உடையவர்கள் அனைவரும் மற்றவர் தூண்டுதலின் றியே உணர்ந்துகொள்ளமுடியும். தமிழகத்தின் பொதுச் சொத்தாகக் கருதத் தக்க நல்லறிவாளர் பலரும் அவ்வப்போது கழகம் பற்றிய தங்களது கருத்துரைகளினால் பொது மக்களுக்கும் வருங்காலத்திற்கும் அறிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டிலே யுள்ள மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் ஏதேனும் ஒரு பகுதி யினரைத்தான் கவர முடிகிறது. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் மேடை, இலக்கியமன்றம், கலைஅரங்கம், கல்லூரிகள், தொழிலாளர் பகுதி போன்ற தமிழர்களின் வாழ்வோடு இயைந்த அத்தனைத் துறைகளிலும் தன் நிழல்படரச் செய்துள்ளது. தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் எல்லா முறைகளிலும் படர்ந்துள்ள கழகத்தின் நிழல் மற்றவர்கள் பலரை மறைத்துவிடுவதினாலேதான் அந்த 'மற்றவர்கள்' எல்லாம் பலப்பல சமயங்களில் ஒன்றாக நின்று கழகத்தின் இலட்சியப் பணியினையும், நடைமுறைக் கொள்கை கோட்பாடுகளையும் தூற்றுகின்றனர். இந்த வழியில் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் எந்த வகையிலும் எவருக்கும் எழுத்திலும் பேச்சிலும் இளைத்தவர்களல்ல! கழகத்தின் சார்பிலே எத்தனையோ சான்றுகளைத் தமிழகத்துப் பொது மக்களுக்குத் தந்துள்ளோம். கம்யூனிஸ்ட்களும் மறுக்காமல்,பாதுகாப்பான மறைவிடங்களிலே பதுங்கிக்கொண்டுள்ளார்கள்! கடைசித் தரக் கம்யூனிஸ்ட்கள், கடைசியாகத்தமிழ்நாட்டுமக்களிடத்திலே கழகம்பற்றிச் சொல்லி வரும் பல குற்றச்சாட்டுகளிலே ஒன்று தான், ''திருச்சி பீடித் தொழிலாளர்கள் போராட்டத்தில் தி. மு. க.வின் துரோகம்''என்பதாகும்! கம்யூனிஸ்ட் தலைவர் எனப்படும் கல்யாண சுந்தரம் என்பவர், இதனைத் தான் செல்லுமிடங்களில் எல்லாம் பேசுகிறார். பேச்சின் இறுதியிலே ''இந்த தி. மு. க.வினர் தொழிலாளர் துரோகிகள்–இவர்களை நம்பாதீர்கள். பீடி முதலாளிகளின் கைக்கருவிகளாக இருப்பவர்கள்–நாங்கள் தான் பாட்டாளி வர்க்கத்தின்பாதுகாவலர்கள்'' என்பனபோன்ற சொற்களையும் தவறாமல் தந்து வருகிறார்! திருச்சிக் கம்யூனிஸ்ட்கள் வெளியிட்டுள்ள ஒரு புத்தகம் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது எந்த அளவுக்கு வெறியுணர்ச்சியுடன் அவர்களால் எழுதப்பட முடியுமோ அத்தனை தரக் குறைவான வார்த்தைகளைக் கொண்டே உருவாக்கப்பட்டுள்ளது. அதனைக் கல்யாணசுந்தரம் மிக மிகப் பாராட்டி ஒரு முன்னுரை வழங்கியுள்ளார்–கழகத்தின்மீது தனக்குள்ள களங்கம் நிறைந்த காய்ப்பையும் வெளியிட்டுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தவர் கம்யூனிஸ்ட்களை வழிகாட்டிகளாகக் கொள்ளாமல் தங்களது செயல் முறைகளை வகுத்துக்கொண்ட ஒரே காரணத்துக்காக-தொழிலாளர் துரோகி என்கிறார்! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிலே அவர் கடைசித் தரமானவர் என்றாலும்தமிழ்நாட்டிலே உள்ள கம்யூனிஸ்ட்கள் அவரை மூன்றும் ரகத் தலைவராகக் கொண்டுள்ளபடியால் அவருடைய கோணல் முறைத் தூற்றலைக் கவனித்துப் பார்ப்போம்.

திருச்சியில் நடைபெற்ற பீடித் தொழிலாளர். போராட்டம், கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்திலிருக்கும் ஐக்ய பீடித் தொழிலாளர் சங்கத்தின் அடிப்படையிலே முதலாளிகளுக்கும்–தங்களுக்கும் இடையிலே எழுந்த கூலி உயர்வுப் பிரச்னைகளை தீர்த்துக்கொள்ளும் முயற்சிகளிலே ஒன்று! துவக்கப்பட்ட கிளர்ச்சியின் முறையும் நிறையும் சரிதானா என்று முடிவெடுக்காமல் முன்னேற்றக் கழகத்தின்தோழர்கள் பங்கேற்று நிற்கும் சுருட்டுத் தொழிலாளர் சங்கம் கம்யூனிஸ்ட்களுடன் ஒத்துழைத்து நிற்கவில்லை என்பதுதான் அவர்களுடைய குற்றச் சாட்டாகும். கம்யூனிஸ்ட்கள் கூலி

## திருச்சி பீடித்

## தொழிலாளர் பிரச்னை

உயர்வுப் பிரச்னையை முக்கியமாகக் கணக்கிடாமல் முன்னேற்றக் கழகச் சார்புடைய பீடித் தொழிலாளர் சங்கம் தங்களை விட்டு விலகிப் போவதைத்தான் தொழிலாளர் துரோகம் என்று ஒலி பெருக்கினார்கள்! தொழிலாளர் வர்க்கத் தலைவர்கள் பட்டியல் தங்களுக்கே உரிமையெனக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்ட்களும் இதனையே ஒரு காரணமாகவைத்துக் கழகத்தின் மீதும் கழகத் தோழர்கள் மீதும் அவதூறுகளையும், அள்ளியள்ளித் தெளித்துவிட்டார்கள். முன்னேற்றக் கழகம் தவிர்த்த, மற்ற தமிழரசுக் கழகம், காங்கிரஸ் சீர்திருத்த கமிட்டி, பிரஜா சோஷலிஸ்ட்களுக்குப் பின்னே நின்றுவிட்ட காரணத்தால். கழகத்தவர்மட்டும் கம்யூனிஸ்ட்களின் வலையிலே சிக்க மறுத்துவிட்டனர். பீடித் தொழிலாளரைத்தங்கள் பிழைக்கும் வழியாக்கி கொண்டவர்கள் மேன்மேலும் தங்கள் துரோகப் பட்டியலை நீட்டிக் காட்டினார்கள்! திருச்சி நகரக் கழகத் தோழர்களைப்பற்றியும், அங்கே நடைபெற்ற இழி செயல்களைப்பற்றியும் கம்யூனிஸ்ட்களின் கயமைத் தன்மைகளைப்பற்றியும், தமிழகம் தெரிந்து கொள்ளக்கூடாதென்பதற்காகவே புத்தக வடிவிலே சில செய்திகளைத் தருவதற்குத் திருச்சிக் கம்யூனிஸ்ட்கள் துணிந்திருக்கிறார்கள்! அவர்களுடன் கைகோர்த்துக்கொள்ளாத இந்த நேரத்திலும் இவர்கள் இத்தனை அளவு வெறிச் சொற்களை வாரியிறைத்துள்ளார்கள் என்றால், நம்மவரும் உடனிருந்து இப்போதையத் தரக் குறைவான ஒப்பந்தம் நடைபெற்றிருக்குமானால், திராவிட முன்னேற்றக் கழகம் தென்னாட்டுக்கே துரோகம் இழைக்கும் சக்தியென்று துணிந்துரைப்பார்கள்! கம்யூனிஸ்ட்களின் கட்டளைக்குக் கழகத்தவர் கீழ்ப்படியவில்லையென்றால் அவர்களையெல்லாம் பீடி முதலாளிகளின் கூலிகள் என்றாக்கி விட்டனர்! அத்தனை அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பு இருந்தாலும் திருச்சி சுருட்டுத் தொழிலாளர் சங்கமும் அதிலே பொறுப்பேற்றுள்ள கழகத் தோழர்களும் கிளர்ச்சியிலே ஒத்துழைத்தாலன்றி தங்களுடைய முயற்சிகள் வெற்றிப் பாதை நோக்கி விரைவுப்படுத்தப்படமாட்டா என்பதை நன்றாகவும் தெளிவாகவும் தெரிந்துகொண்டிருந்தவர்கள் கம்யூனிஸ்ட்கள்தான்! பொய்க் குற்றங்களைச் சொல்லியாவது தங்களுடன் பிணைத்துகொள்ளவே பலமுறைகள் முயன்றுள்ளார்கள்! கழகத் தோழர்கள் முதலாளிகளின் கையாட்கள் என்றால் கம்யூனிஸ்ட்கள் கழகத்தவர் உறவினையே வேண்டியிருக்க மாட்டார்கள்! பொதுச் செயலாளரும், அறிஞர் அண்ணா அவர்களும் அறநெறியுடன் அளித்த அறிக்கையையும் கம்யூனிஸ்ட் தலைவர்களும் பீடித் தொழிலாளர்களின் வழிகாட்டிகளும் வரவேற்றுப் பாராட்டியிருக்க மாட்டார்கள்! மகிழ்ச்சியுடன் பாராட்டியவர்கள் மனங் குமுறிப் பழி தூற்றுவது ஏன்?

திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர் பகுதியில் தன்னைத் தானே பிணைத்துக்கொண்டு பணியாற்றும் காரணத்தினால், மற்ற அரசியல் இயக்கத்தினரும் செய்து கொள்வதுபோல தனித் தனி அமைப்புகளையும் உருவாக்கிப் பேதங்களும், பிளவுகளும் முரண்பாடுகளும் பெருகி, தொழிலாளர் நலன் பாதிக்கப்படுவதை என்றும் பாராட்டியதில்லை, வரவேற்று மகிழ்ந்ததில்லை! திருச்சி நகரத்துப் பீடித் தொழிலாளர் பிரச்னை கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் கிளர்ச்சிகளில் ஒரு அங்கமாகத் திகழ்ந்தது. அதே ஆதாரத்துடன் ரயில்வே போராட்டத்தின் உண்ணாவிரத மிரட்டலுக்கும் அதனைப் பயன்படுத்திப் பேசிக்கொண்ட அனந்தன் நம்பியார்களும் அங்கேதான் அடைபட்டு நிற்கிறார்கள்! திராவிட முன்னேற்றக் கழகச் சார்புடைய தோழர்களிலே பலர் பீடித் தொழிலாளர் அமைப்பிலே அங்கம் வகிக்கும் காரணத்தால், அவர்கள் மற்ற அரசியல் நோக்கம் படைத்தவர்களின் எண்ணங்களுக்கு உடன்பாடு தருவது, தங்களின் கொள்கை கோட்பாடுகளிலே வளைவு நெளிவுகளுக்கு இடம் தரும் கட்டாயத்துக்குத் துரத்தப்படுவார்கள் என்ற உண்மைக்கேற்ப, தலைமை நிலையம் கழகத்தின் அதிகார பூர்வமான அறிக்கை, போராட்டக் கிளர்ச்சியின் நிலை விளக்கும் செய்தியாக வெளியிடப்பட்டது! அதனையும் கம்யூனிஸ்ட்கள் தங்களது கண்டனத்துக்குரிய பெரும் பிரச்னையாக்கிவிட்டார்கள்! கம்யூனிஸ்ட் தலைவரென்பார்கள் கல்யாண சுந்தரம்போலவே செயல்படுவது, நிபந்தனையின்றி அறிக்கை அமையவில்லையென்று ஆயாசப்படுவது, கல்யாணசுந்தரம் சொன்னபடிதான் அறிக்கை தயாரிக்கப்பட்டதென்று கம்யூனிஸ்ட் தொண்டர்கள் களிப்பாட்டம் போடுவது, ஆகியன அவர்களுடைய நெடுநாள் அற்பாசைகளையே அறிமுகப்படுத்துகின்றன! கழகத் தலைமையாளர்களை–கண்ணியம் குறையக்கூடாதென்ற நல்ல எண்ணத்துடன் அறிக்கை கொடுத்தவர்களைப்பற்றி, கம்யூனிஸ்ட்கள்எடை போட்டுள்ள முறையிருக்கிறதே–அது நன்றி கெட்டவர்களுக்குக் கரங் கொடுப்பது நம் தவறென்றே நினைவூட்டுகிறது! கழகத் தோழர்கள் கழகத்தின் பலத்தை பீடித் தொழிலாளர் வெற்றிக்குத் துணையாக்க வேண்டுமென்று அறிக்கை வெளியிட்ட பொதுச் செயலாளர், அந்த நேரத்தில் கிளர்ச்சியில் பங்குகொள்ளும் கட்சிகளின் பலத்தை எடை போட்டு எதுவும் கூறவில்லை! கட்சிகளுக்கு அப்பாற்பட்ட டாக்டர்மதுரம்போன்ற திருச்சி நகரப் பெருமக்களும் முன்னிற்பதால் முன்னேற்றக் கழகமும் தன்னுடையஒத்துழைப்பைஅதிகாரப் பூர்வமாக அளிப்பது கடமையென அறிவித்தார்! ''திருச்சி வேலை நிறுத்தம் வெற்றிபெற வேண்டும்; பீடித் தொழிலாளர்களின் கூலி ரூ 2–4–0 ஆக உயர்த்தப்பட வேண்டும். தொழிலாளர் அணியைக் கட்சிக் கண்ணோட்டத்துடன் பார்த்திடலாகாது. தொழிலாளர் அணியில் பிளவும் பேதமும் எழவிடலாகாது'' என்று உள்ளம் நிறைந்த உரைகள் தரப்பட்டன! நேசக் கரங்களையெல்லாம் அரிவாள் கொண்டு துண்டிக்கும் நற்குணம் படைத்த கம்யூனிஸ்ட்கள்தான் முதலாளிகளுடன் பேரம் பேசி, சரணாகதியுற்றபின் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தை தாங்கள் அபகரிக்கத் தயாராக இல்லை என்று தெரிவித்தார்கள்! ஆதரவு வேண்டும் என்று ஆயாசப் பட்டவர்கள்தான் ஓரிரு நாட்களிலேயே ஆகாதவர்கள் எனக் கூறிப் பழிச் சிந்து பாடினார்கள்!

திருச்சி நகரக் கிளையின் ஆதரவை போராட்ட நிகழ்ச்சிகளுக்கும் 25–9–58–ம் நாள் பொதுவேலை நிறுத்தத்திற்கும் துணையாக்கித் தருவது என்ற முடிவுக்குப் பிறகுதான்,

— 11-ம் பக்கம் —

# சரணாகதிப் படலங்கள்!

# சென்னை கற்பித்த பாடம்

[19-4-59 அன்று "சுதந்திரன்" எனும் ஈழத்து ஏட்டில், அதன் சென்னை நிருபர் ஆன திரு. ஈழத்தரசன் எழுதி வெளியாகியுள்ள "சென்னைக் கடித"த்தை இங்கு வெளியிட்டுள்ளோம். சென்னை நகரசபையில் நாம் பெற்ற வெற்றி ஈழத்துத் தமிழர்கள் சிந்தனையை எப்படித் தொட்டுள்ளது என்பதனைக் காட்டும் காலக்கருவி இது.]

சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிவாகை சூடியது. ஆட்சிப் பொறுப்பில் உள்ள காங்கிரஸ் கட்சி மண் கவ்வியது. கம்யூனிஸ்ட் கட்சி படுதோல்வி அடைந்து இருந்த இடமே தெரியாமல் மறைந்தது. சோஷலிஸ்ட் கட்சிக்கும் அதே கதி. பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைப் பற்றிப் பேசவேண்டியதில்லை நேரடியாகத் தேர்தலில் குதிக்காமல் எட்டி நின்று சிலரைத் தட்டிக்கொடுத்து வந்த தமிழரசுக் கழகமும் துள்ளு மீசையைத் தொங்கப் போட்டுக் கொள்ளும்படியாகிவிட்டது. ஜனநாயக காங்கிரஸின் தலைவிதியும் அப்படியே ஆயிற்று.

இம்முறைதான் முதன் முதலாகக் கார்ப்பரேஷன் தேர்தலில் இறங்கிய தி. மு. க. மொத்தமுள்ள 100 ஸ்தானங்களில் அசலாக 45-ஐயும் தாம் ஆதரித்த சுயேச்சை அபேட்சகர்கள் வெற்றிபெற்ற வகையில் இன்னும் 3-ஐயும் ஆக எல்லாம் 48-ஐக் கைப்பற்றி மற்றக் கட்சிகள் யாவற்றுக்கும் முன்னுச்சு நிற்கிறது.

காங்கிரஸ் 37 ஸ்தானங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி 2 ஸ்தானங்களையும், சோஷலிஸ்ட் கட்சி 2 ஸ்தானங்களையும், பிரஜாசோஷலிஸ்ட் கட்சி 1 ஸ்தானத்தையும் சுயேச்சையாளர்கள் (தி. மு. க. ஆதரவு பெற்றவர்கள் நீங்கலாக) 10 ஸ்தானங்களையும் பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த தேர்தலின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளின் உண்மை நிலை, அவற்றின் செல்வாக்கு, சிறப்பு எல்லாம் ஓரளவு தெளிவுபடுத்தப்பட்டாகி விட்டன. தமிழ்நாட்டு அரசியலில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்துவதாகவும் பிரஸ்தாபத் தேர்தல் அமைந்துவிட்டதைக் குறிப்பிடலாம். ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சி தன் ஆயுள்காலத்தில் கண்டறியாத தோல்வியை ஏற்க வேண்டி வந்ததும், கம்யூனிஸ்ட் கட்சி தலைதூக்க முடியாதபடியும் வாய் திறக்க முடியாதபடியும் வாக்காளப் பெருமக்களால் ஒதுக்கித் தள்ளப்பட்டதும், சம்பந்தப்பட்ட இரு கட்சிகளுக்கும் தமது தம்பட்டத்தைக் குறைத்துக்கொள்ளவும் வருங்காலத்திலாவது திருந்தி நடக்கவும் உதவும் என்று நம்பலாம்.

**கோட்டையில் குழி**

சென்னை பல இனமக்களும் கலந்து வாழும் நகரம். பெரும்பாலும் படிப்பு வாசனை உள்ளவர்கள் இங்குள்ள மக்கள்; கட்சிகளின் கொள்கைகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள் அவர்கள். இன்னும் சொல்லப்போனல் சென்னை ஓர் வர்த்தகத் தொழில்துறை நகரமாக இருப்பதால் இங்கு வசிக்கும் மக்களில் கணிசமான பகுதியினர் தொழிலாளர்களாகவே இருக்கிறார்கள்

தொழிலாளர்களையே தமது அரசியல் பிழைப்புக்கு ஆதாரமாக வைத்து அவர்கள் பிரனையையே தமது உயிர்ப் பிரச்னை என்று சொல்லி நாளெல்லாம் முழக்கிவரும் கம்யூனிஸ்ட்கள் சென்னையைத் தமது கோட்டையாகக் கருதி வந்தனர். அந்தக் கோட்டையிலேயே அவர்களுக்குக் குழிதோண்டப்பட்டு விட்டது.

**அபேட்சகர்களே கிடைக்கவில்லை**

நூறு ஸ்தானங்களில் 100-க்கு காங்கிரஸும் 90-க்கு தி. மு. க. வும் அபேட்சகர்களை நிறுத்தின. அதற்கான வாய்ப்பு அந்தக் கட்சிகளுக்கு இருந்தது. ஆனல் கொம்யூனிஸ்ட்களுக்கோ அந்த வாய்ப்பும் இல்லை. ஆக 17 அபேட்சகர்களையே தேடிப் பிடித்துத் தேர்தலில் நிறுத்த அவர்களால் முடிந்தது அந்தப் பதினேழு பேரிலும் 15 பேர் தமது கோட்டையில் 'கோட்டை' விட்டுவிட்டார்கள். இரண்டே இரண்டு பேருக்குத்தான் தப்பித் தவறித் தலைதூக்க முடிந்தது.

**தோழர்களின் கதி**

தமது கோட்டையிலேயே விரட்டியடிக்கப்பட்ட கம்யூனிஸ்ட்கள், தொழிலாளர்களால் - நிராகரிக்கப்பட்ட தோழர்கள்-இனி என்ன சொல்லிக் காலக்ஷேபம் நடத்தப்போகிறார்களோ, நாமறியோம். யாருக்காகத் தாம் குரல் கொடுப்பதாகக் கம்யூனிஸ்ட்கள் கூப்பாடு போட்டார்களோ, அந்த மகாஜனங்களே அவர்களை வேண்டாம் என்று கை கழுவி விட்டுவிட்ட பிறகு இவர்களுக்கு என்ன வேலை இருக்கிறது? இவர்கள் சிந்திக்கவேண்டிய விஷயம் இது. சீறிப் பயனில்லை.

சென்னையில்தான் தோழர்களுக்கு அந்த 'அடி' என்றல் தமிழ்நாட்டிலுள்ள மற்ற 53 நகரசபைகளிலாவது பெருமைக்குரிய நிலை கிடைத்ததா? தஞ்சையிலும், தூத்துக்குடியிலும் தோல்விமேல் தோல்வி திருச்சியில் சேலத்தில் எல்லாம்கூடத் துரதிர்ஷ்டம்தான் மதுரையும் கோவையும் மனது வைக்காதிருந்தால் கம்யூனிஸ்ட்கள் அரசியல் துறவுபூண்டு பஜகோவிந்தம் பாடிக்கொண்டு மாஸ்கோவுக்குக் காவடி எடுத்திருக்க வேண்டியதுதான். இதைத் தவிர வேறு வழியில்லை அவர்களுக்கு. ஏனெனில் கேரளத்திலும் அவர்கள் குட்டு வரவர அம்பலமாகி வருகிறது

**தி. மு. க. வின் அதிசப்படியான வாக்குகள்**

காங்கிரஸைப் பொறுத்தவரையில் சென்னையில் அதற்கு இம்முறை கிடைத்த அதிர்ச்சி அதன் மூல வேரையே தாக்குவதாக இருக்கும். பத்து ஆண்டுப் பயிரான தி மு. க. எடுத்த எடுப்பிலேயே, கார்ப்பரேஷன் தேர்தலில் இறங்கிய முதல் தடவையிலேயே, காங்கிரஸை ஒதுக்கி விட்டது. ஒருபுறத்தில், அசலாக 8 ஸ்தானங்களைக் காங்கிரஸைக் காட்டிலும் அதிகப்படியாகப் பெற்றது ஒன்றுதான் அதன் வெற்றி என்று சொல்லி முடித்துவிட முடியாது

காங்கிரஸ் போட்டியிட்ட 100 ஸ்தானங்களிலும் பெற்ற மொத்த வாக்குகளைக் காட்டிலும் தி. மு. க. தான் போட்டியிட்ட 90 ஸ்தானங்களிலும் 4 569 வாக்குகளை அதிகப்படியாகப் பெற்றிருக்கிறது.

**காங்கிரஸ் செயலாளர் தோல்வி**

சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர் திரு அற்புதராஜனே தி. மு. க. அபேட்சகர் ஒருவரால் தோற்கடிக்கப்பட்டார்.

சென்னையில் மட்டுமல்லாமல் ஆம்பூர் வேலூர் தஞ்சைத் தேர்தல்களிலும் காங்கிரஸால் தி மு. க. வை முந்த முடியவில்லை. ஏனையவற்றிலும் கூடக் காங்கிரஸுக்கு பெருமை தரக்கூடிய அளவு ஸ்தானங்கள்கிடைக்கவில்லை. ஏன்?

**அடுக்கு மொழியும் பயன்தரவில்லை**

ஜாதி அடிப்படையில் வாக்குப் பறிக்கும் அரசியல் சாணக்கியம் சென்னையில்தான் செல்லுபடியாக முடியாதென்றல் மற்றப் பகுதிகளிலும் அப்படியா போக வேண்டும்? சுளை சுளையாகப் பணத்தையும் விலக்கப்பட்ட பானங்களையும் திருட்டுத்தனமாகத் திணித்தால் அவற்றையெல்லாம் வாங்கிக்கொண்டு வாக்குச் சீட்டைமட்டும் வகையான அபேட்சகருக்குப் போடும் பொது மக்கள் சென்னையில்தான் இருக்கிறார்கள் என்றல், ஏனைய பகுதிகளிலும் அப்படித்தானு நிலைமை?

ஆம்; அதுதான் உண்மையும்கூட, 'தி. மு. க. வினர் அடுக்கு மொழி பேசியும், உவமான உவமேயங்களை அள்ளி வீசியும் பொது மக்களின் வாக்குரிமையைப் பெற விழைகிறார்கள்' என்று கேலி பேசிய சென்னை மந்திரிகளே முன்னின்று தமக்கும் அந்தக் கலை கைவரும் என்று காட்டத் துணிந்தும் கண்ட பலன் தோல்விதான்.

**தொண்டு மனப்பான்மை வேண்டும்**

ஆக, காங்கிரஸின் தோல்விக்கு உண்மைக் காரணம் அது நடந்துகொண்ட விதந்தான் என்பதை இந்தத் தருணத்திலாவது சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்துகொண்டு முன் எச்சரிக்கையாக நடந்தால் எதிர் வரும் பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பூண்டோடு ஒழிவதைத் தடுக்கலாம்.

ஆளத் துணிபவர்களுக்கு, ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துவிட்டவர்களுக்கு தொண்டு மனப்பான்மை வேண்டும். நாட்டு நிர்வாகத்துக்கான நல்ல திட்டங்கள் வேண்டும்; அவற்றைச் செயல்படுத்தும் திறன் வேண்டும்; செயல்படுத்தும்போது மக்கள் பாதிக்கப்படாதிருக்கிறார்களா என்பதைத் தெரிந்து உசிதமான முறையில் காரியமாற்றுவதற்கான பக்குவம் வேண்டும்.

இத்தனையும் இல்லாமல் எதிர்க்கட்சிகளைத் தாக்குவதையும், தாம் நினைத்ததே சட்டம் என்ற சர்வாதிகார ரீதியில் நடப்பதையும், மக்கள் எண்ணத்துக்கு மதிப்புக் கொடுக்காமல் அலட்சியமாக இருப்பதையும் பழக்கமாகக் கொண்டுள்ளவர்களுக்கு ஜனநாயக சம்பிரதாயப்படி, குறிப்பிட்ட காலக்கிரமத்தில் கிடைக்கும் தண்டனை என்ன என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

**காங்கிரஸ் ஏன் தோற்றது**

**1. சென்னை மாகாணத்துக்கு தமிழ்நாடு என்ற பெயர் வைக்கக் காங்கிரஸார் மறுத்ததன் விளைவு.**

**2. வானெலிப் போராட்டத்துக்கு வளைந்து கொடுத்து இந்திக்குப் பதில் தமிழ் முழங்க வைக்கப் பின் நின்றதன் விளைவு.**

**3. ஊட்டிக்கு உல்லாச வாசத்துக்கு புறப்பட ஒற்றைக் காலில் நின்றதன் விளைவு.**

**4. வரிக்குமேல் வரி உயர்வு போட்டு கடைசியில் அழுகல் வரியும் விதித்ததன் விளைவு.**

**5. வடவரின் சுரண்டலிலிருந்து தமிழ்நாட்டை மீட்கப் பயந்து நிற்பதன் விளைவு.**

**6. கிராம அபிவிருத்தியிலும் வளம் தரும் நிர்மாணத் திட்டங்களிலும் போதிய கவனம் செலுத்த மறுத்ததன் விளைவு.**

நகர சபைத் தேர்தல்களில் காங்கிரசின் தோல்வியாக முடிந்தது..

**தி. மு. க. வின் சிறப்பு**

ஆட்சிப் பொறுப்பை ஏற்க மாற்றுக் கட்சி வேண்டும் என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டார்கள். காங்கிரஸின் கையாலாகாத்தனத்தை நன்றகப் புரிந்துகொண்ட மக்கள் அதற்குப் பதிலாக தி. மு. க. வின் தலைமையை நாடத் தொடங்கி விட்டார்கள்.

திட்டம் உள்ளவர்கள், செயல் திறமை உடையவர்கள், அயராது உழைப்பவர்கள், கொள்கை உரம் படைத்தவர்கள், மக்கள் நலம் பேணுகிறவர்கள். பதவிப்பித்து அற்றவர்கள். டெல்லிக்குப் பணியாத நெஞ்சுரம் படைத்தவர்கள் தி. மு. க. வினர்தான் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அறிஞர் அண்ணவின் தலைமையில் நாவலர் நெடுஞ்செழியனின் ஆணை ஏற்று அரும்பணி ஆற்றும் வீரர் கூட்டந்தான் தமக்கு விடுதலை வாழ்வும் சுபீட்ச நிலையும் ஏற்படுத்தித் தர வல்லவர்கள் என்பதை இந்தப் பத்தாண்டுக் காலத்தில் இப்போதுதான் மக்கள் ஐயந்திரிபு இல்லாமல் அறிந்து கொண்டார்கள்.

**தமிழரசுக் கழக உமாபதி தோல்வி**

ஏக இந்தியாக்களையோ அல்லது எடுத்ததற்கெல்லாம் சோஷலிஸம் பேசுகிறவர்களையோ அவர்கள் மாற்றுக்கட்சிக்கு லாயக்குள்ளவர்களாகத் தெரிந்தெடுக்கவில்லை. "தமிழ்...தமிழ்நாடு..." என்று அவ்வப்போது சாதகமான காற்று வீசும்போது முழங்கிவிட்டு ஓய்ந்திருக்கும் கழகத்தார்களையும் மக்கள் தெரிவு செய்யவில்லை. தமிழரசுக் கழகத் தூண்' என்று சொல்லத்தக்கவரும் "உமா" சஞ்சிகை ஆசிரியருமான திரு. உமாபதியே மண் கவ்வினரென்றல் அந்தக் கட்சியின் நிலை பற்றி வேறு என்ன சொல்ல வேண்டும்!

**சேவை**

சரி தி. மு க. வெற்றிக்கொடி நாட்டிவிட்டது. அதன் கொள்கை மக்கள் மத்தியில் எடுபட்டுவிட்டது என்றே சொல்லலாம். இத்தனை சூருவளி வேகத்திலும் மாற்றுக் கட்சியினர் தேர்தல் முடிவைக் கண்டு மலைத்துப் போகும் வகையிலும் வெற்றி கிட்டியதற்குக் கழக அமைப்பாளர், காப்பாளர், முன்னணி வீரர்கள் மற்றுமுள்ள தொண்டர்கள் ஆர்வமுடன் ஆற்றி வந்த பணிக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போலக் கழகத்து நடிப்புச் செல்வங்கள் செய்த சேவை திகழ்கிறது.

**செயல் வேண்டும்**

வெற்றிக் களிப்பில் தி. மு க. செயலில் இறங்கத் தாமதிக்கக் கூடாது. சொல்லில் மட்டுமல்ல, செயலிலும் தாம் வீரர்தான் என்பதை நிதர்சனம் காட்ட வேண்டிய காலம் இப்போது தி. மு. க. வுக்கு வந்துவிட்டது. குறிப்பாகச் சென்னையின் தேவைகள் பல. அவற்றைக் கச்சிதமாகப் பூர்த்தி செய்து வைக்க வேண்டும். மக்கள் அன்பையும் ஆதரவையும் மென்மேலும் பெற இது வழியாகும். ★

## கழகம் வென்றது; காங்கிரஸ்-கம்யூனிஸ்ட் கரைந்தது.

# அவலம் வழியும் கன்னிமாரா



நம் நாட்டில் ஒரு கொடிய வழக்கம் உண்டு. தொன்றுதொட்டு நிலவி வரும் ஒன்றைக் குறைகூறுவதைப் பாவமெனக் கருதுகிறார்களேயொழிய அதற்கான காரணங்களை ஆராய்வதில்லை.

கல்கத்தாவில்இருட்டறை இருந்ததோ என்னவோ, சென்னையில் கன்னிமாரா நூல் நிலையம் என்று ஒன்று இருக்கிறது. சென்னை அரசு நடத்திவரும் இது, இந்தியாவின் நான்கு தேசீய நூல் நிலையங்களில் ஒன்று. இந்தியாவில் பதிப்பாகும் புத்தகங்கள் அனைத்தின் பதிப்பகத்தாரும் இந்நூல் நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் இலவசப் பிரதி ஒன்று அனுப்பிவைக்க வேண்டும். ஏறக்குறைய இந்த நூலகம் நூறு ஆண்டுகளாக இருந்து வருகிறது. இன்று அதன் நிலையைச் சுருக்கிக் கூற வேண்டுமானால் "விதவைக் கோலத்தில்" இருக்கிறதெனலாம். காட்சி சாலைக்குப் பக்கத்தில் இருப்பதால் இதுவும் ஒரு காட்சி சாலையாக இருக்கிறதே ஒழிய நூல் நிலையமாக இல்லை.

நுழைவாயிலிலே ஏதோ பாழடைந்த சமீன் மாளிகைபோல் இருக்கும். பெரிய பங்களாக்களில் ஆடு மாடுகள் நுழையாமல் இருக்க ஏற்படுத்தப் பட்டிருக்கும் சுழல்கதவு போன்று ஒன்று நம்மை வரவேற்கும். அதில் ஒரு சுற்றுச் சுற்றி உள்ளே நுழைந்ததும் கறுப்புக்கண்ணாடி அணிந்திருப்பதுபோல் தோன்றும். அவ்வளவு இருட்டு. எதிரே ஆங்கிலப் புத்தகங்களின் பட்டியல் கூடுகள் இருக்கின்றன. தமிழ்ப் புத்தகங்களுக்கான பட்டியல் கூட்டை ஒரு மூலையில் துரத்திவிட்டிருக்கிறார்கள்.

இப்பொழுது சிறு தேநீர் விடுதிகளில்கூட "டியூப்" விளக்குகள் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும்போது பழைய ஏடுகள் படிக்கக்கூடிய இந்த இடத்தில் மின்விளக்குகள் வசதியும் குறைவு. இயற்கை வெளிச்சமும் இல்லை. புத்தகங்களை எடுத்துக்கொண்டு மாடிக்குப் போகவேண்டும். மொத்தம் சுமார் 50 பேர்தான் உட்கார்ந்து படிக்க வசதி இருக்கிறது. அங்கு போடப்பட்டிருக்கும் மேசையும் நாற்காலியும், திரைப்படங்களில் இராசா மந்திரி கதைகளில் போடப்பட்டிருப்பவைபோல் இருக்கும். நாற்காலியில் சாய்ந்து உட்கார முடியாது. புத்தகங்களை மேசைமீது வைத்துப் படிக்கவும் வசதி இல்லை. மேசைமீது இருக்கும் விளக்கு பாதிச் சுற்றளவுக்குக்கூடத் தெரியாது. ஒளியும் குறைவு. குறிப்பெடுக்கும் பகுதியில் படும்பாடு சொல்லுந் தரமன்று. பெரிய பெரிய "என்சைக்லோபீடியா" போன்ற புத்தகங்களை மேசைமீது வைத்துப் பார்த்துக் குறிப்பெடுக்கச் சற்றும் வசதி இல்லை. குறிப்பெடுக்கும் பகுதியில் மிகவும் நெருக்கமாக இருபது பேர்களே உட்காரமுடியும். இந்தக் கூட்டத்தில் பெண்களின் பாடு மிகவும் கஷ்டம்.

இங்கிலையில் மௌண்ட்ரோடில் உள்ள அமெரிக்க செய்தித்துறை நூலகத்தின் ஒளி, இருக்கை வசதிகளை மனக்கண்முன் கொண்டுவந்து பார்த்தால் வேறுபாடு நன்கு புலப்படும்.

புத்தகங்களைப் பார்க்கலாம். ஏற்கனவே விதவைக்கோலம் என்று குறிப்பிட்டேன். கணவன் இருக்கும்போது மஞ்சள் குங்குமத்துடன் மலர் சூட்டி மாலையில் கடற்கரையில் உலவின காட்சியை நினைத்து நெஞ்சுருகும் விதவை இவள்! நூல் நிலையத்தைப் பயன்படுத்தும் தலைமுறை அழிந்துவிட்டது. இன்று இது ஒரு காட்சிசாலைதான். நல்ல புத்தகங்கள் எதை எடுத்தாலும் முதல் பத்துப் பக்கங்களும் கடைசிப் பத்துப் பக்கங்களும் இருக்காது. இருக்கும் பக்கங்களிலும் மை தோய்ந்தும், கண்டபடி மையினால் கிறுக்கப்பட்டும் இருக்கும். டிக்கன்ஸ், கோல்டுஸ்மித், மக்காலே, ஸ்காட், ஷா, கார்லைல் இவர்களின் படைப்புகள் பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ளன. டிக்கன்ஸின் சில புத்தகங்கள் மட்டும் புதிய பிரதிகள் வாங்கப் பட்டிருக்கின்றன. மேலும் சில அதிசயங்கள் உண்டு. பட்டியலில் அங்கிள் டாம்ஸ் கேபின் என்றோ டேவிட் காப்பர்பீல்டு என்றோ இருக்கும் புத்தகங்களை எடுத்துப் பார்த்தால் எஸ். எஸ். எல். சி. க்கான (Non-Detailed) கதைப் பகுதிக்காகச் சுருக்கி எழுதப்பட்ட புத்தகங்கள் இருக்கும். இவைபோல் பல. மேலும்பள்ளி மாணுக்கர்களுக்காக வெளியிடப்படும் "நோட்ஸ்"களை நூற்றுக்கணக்கில் 26-D என்ற இலக்கியப் பகுதியில் அடுக்கி வைத்திருக்கிறார்கள்! இலவசமாக அனுப்பினால் அவைகளை இப்படியா வைப்பது? இவைகளை முதலில் தூக்கிக் கடலில் எறியவேண்டும்.

தமிழ், தெலுங்கு முதலிய புத்தகங்களைத் தனித்தனிப் பகுதிகளில் உரிய இடங்களில் வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்திப் புத்தகங்களை ஆங்கிலப் புத்தகங்களுடன் சேர்த்து, 'பொருள்' வரிசையில் கலந்து அடுக்கி வைத்திருக்கிறார்கள். அரசியல் பகுதியில் பிளாட்டோவின் அரசியல் என்ற ஆங்கிலப் புத்தகத்திற்குப் பக்கத்தில் புருசோத்தமதாஸ் எழுதிய "பஞ்சசீலம்" என்ற இந்திப் புத்தகம் இருக்கும். இப்படி இருமொழிப் புத்தகங்களையும் "பொருள்" (Subject Index) வரிசையில் அடுக்கிவைக்கும் முறை எவன் மூளையில் உண்டாயிற்றோ! லைப்ரரி டிப்ளமாவில் இம்முறையிலா வைக்கச் சொல்லியிருக்கிறது? ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியைப் புகுத்தும் ஆதிக்க முயற்சியின் ஒரு பகுதியா இது?

எவ்வளவு நல்ல புத்தகமானாலும் அதற்கு இரண்டோ அதற்குக் கூடுதலாகவோ பிரதிகள் கிடையாது. எந்தப் புத்தகம் வேண்டுமானாலும் பதிவு செய்து வைத்துக்கொண்டால் தான் கிடைக்குமே ஒழிய சாதாரணமாகக் கிடைக்காது.

தமிழ்ப் புத்தகங்களைப் பற்றிக் கூறினால் "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்ற பாட்டு நினைவிற்கு வரும். விரும்பிப் படிக்கக்கூடிய எந்தப் புத்தகமும் முழுவதுமாக இருக்காது புத்தகங்களைத் தேடிப் பிடிப்பதே மலையைக் கிள்ளி எலியைப் பிடிப்பதுபோல் ஆகும். பட்டியலில் "மருதூர் மாணிக்கம்" C 291 என்றிருக்கும். C 291 என்ற பகுதியில் ஆயிரம் புத்தகங்கள் காது அறுந்தும், கைபோயும், கால் முறிந்தும் எந்த ஒழுங்கு முறையும் இல்லாமல் குப்பைபோல் கிடக்கும். ஆயிரம் புத்தகங்களையும் ஒருமுறை புரட்டினால்தான் " 'மருதூரார்' இருக்கிறாரா?" என்று பார்க்கமுடியும். இரண்டு மணிநேரம் தேடி அகப்படவில்லையானால் வெளியில் போயிருக்கிறார் என்று பொருள் அகப்பட்டாலும் குற்றுயிராயும் குலை உயிராகவும் காட்சி அளிப்பார்.

இப்படி அடுக்கிவைக்கும் முறைக்கு டிப்ளமா எதற்கு! ஒரு டிப்ளமாவும் வாங்காத பாட்டிகள் வீட்டு அடுப்படியில் சாமான் டின்களை எவ்வளவு எளிதில் எடுக்கும் முறையில் அடுக்கி வைத்திருக்கிறார்கள்! புத்தகத்தைத் தேடி எடுக்கும் தொல்லைக்காகவே பதிவு செய்து வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

காலேஜ் ரோடில் உள்ள "லிடரரி சொஸைடி நூலகத்தில்" ஆசிரியர்கள் அகரவரிசையிலும், மற்றும் புத்தகங்களுக்கு எண்கள் தரப்பட்டும் எளிதில் எடுக்கும் முறையில் அடுக்கிவைத்திருக்கிறார்கள். இதன் கௌரவக் காரியதரிசி ஒரு ஆங்கிலேயர். பெரும்பலான உறுப்பினர்களும் ஆங்கிலேயர்களே.

புத்தகங்களைப் பற்றிச் சில சொற்கள். எலிக்குஞ்சுவும், சுண்டைக்காயும் எழுதியுள்ள "காதலா? சாவா?" போன்று பத்துப் பக்கத்தில் சினிமா பாட்டுப் புத்தகம் போன்று மூர் மார்க்கட் பிளாட்பாரத்தில் விற்கப் படும் புத்தகங்களை நேர்த்தியாகப் பைண்டு செய்து அடுக்கிவைத்திருக்கிறார்கள். முக்கியமான புத்தகங்கள் பல கிடையாது. அரசியல் காரணங்களுக்காகப் பிடிக்காத சிலரின் புத்தகங்கள் வைக்கப்படாததும் குற்றமே. அதுதான்போகிறதென்றால் "தென்னாட்டுப் போர்க்களங்கள்" எங்கே?

மற்றுமொரு கோமாளித்தனம்; யார் யாரோ பலர் எழுதின புத்தகங்களை ஒன்றாகச் சேர்த்து மொத்தமாக பைண்டு செய்து வைத்திருக்கிறார்கள்.

இறுதியாக பழைய பத்திரிகைப் பகுதிக்குச் செல்வோம். மலை மலையாக பைண்டு செய்யப்பட்ட பழைய பத்திரிகைகள், கட்டடங்கள் கட்டக் கொட்டப்பட்டிருக்கும் செங்கற்கள் போல் கிடக்கின்றன. எந்தப் பத்திரிகையும் ஆண்டு தவறாமல் ஒழுங்காகவும் வரிசையாகவும் இல்லை. கைக்கு வந்ததை பைண்டு செய்து நிரப்பியிருக்கிறார்கள். இதனால் யாருக்கு என்ன பயன். கோணிஊசியும் கோட்டானும் பழைய பிரதிகள் என பைண்டு செய்து வைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்னவென்றே புரியவில்லை. "கலைக்கதிர்", நேஷனல் ஜியாக்ரபிகல் பத்திரிகை" போன்றவற்றை மட்டும் பிரதி விடாமல் சேர்த்து பைண்டு செய்துவைத்தால் போதாவா? மற்றக் குப்பைகளை அகற்றிவிடலாம். அரசினர் கெசட் நல்ல முறையில் பயன்படத்தக்க வகையில் பைண்டு செய்து வைத்திருக்கிறார்கள். அதிலும் ஒரு குறை. ஆண்டு முறையில் அடுக்கி வைக்கப் படவில்லை.

ஒரு வேளை பணியாட்கள் குறைவு என்று நினைக்கலாம். அதல்ல காரணம். தூண்களுக்குப் பதில் ஏவலாள்களே நின்றுகொண்டிருக்கிறார்கள்! அடிப்படை ஊழல்களுக்குக் காரணம் கவனக் குறைவு; திறமையின்மை; அலட்சிய மனப்பான்மை. எல்லாவற்றிற்கும் மேல் இதுவரை யாரும் இதன் நிர்வாகத்தின் குறைகளைச் சுட்டிக் காட்ட முன்வரவில்லை. உடனடியாக அரசினர் ஒரு குழு அமைத்துத் தீர விசாரணை செய்து நூல் நிலையத்தை நன்முறையில் இயங்கச் செய்ய வேண்டும். இது தற்காலிக ஏற்பாடு.

மற்றுமொரு எண்ணம். "தென்னாட்டில் ஆறுகள் இல்லை. அணைகள் கட்ட; இருந்திருந்தால் மத்திய அரசிடம் கோடிக்கணக்கில் நிதி உதவி பெற்று அணைகளைக் கட்டிக் குவித்திருப்போம்" என்று பிதற்றி வரும் தென்னாட்டு அமைச்சர்கள் அறிவு வளர்ச்சிக்கு ஒரு நல்ல நூல் நிலையம் நிறுவ மத்திய அரசிடம் ஒரு கோடி உதவி பெற்று நவீன முறையில் பெரியதொரு நூல் நிலையம் ஒன்று ஏன் நிறுவக்கூடாது. அறிவு வளர்ச்சிக்கா இந்த அமைச்சரவை பாடுபடப் போகிறது? அவர்களின் ஒரே இலட்சியம் தேர்தல்தான்.

**விலங்கொடு மக்களனையர்**
**இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்.**

திருக்குறள் தெரிந்தவரா நம் அமைச்சர் குழுத் தலைவர்?

**—சி. சரோசினி.**


## தென்றல் நண்பர்களுக்கு!

இப்போது வெளியாகும் விருத்தப் போட்டிக் கடுத்து சதகப் போட்டி நிகழும். தோழர்கள் ஏதேனும் சதகச் செய்யுள் இனி மனம்போல் எழுதுக. விருத்தப் போட்டி இருந்த இடத்தில் தோழர்கள் எழுதும்

சதகச் செய்யுள்கள்

இடம் பெறும்.

**இறுதி நாள் : 8-5-'59.**

தென்றல் : : சென்னை - 6.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

# எண்ணம்

மலர் 5 | 25-4-59 | இதழ் 45

## நகரமும் கழகமும்

ஆணவ முரசறைந்த அமைச்சர்கள் அவல ஒப்பாரி வைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. சென்னை நகராட்சித் தேர்தலில் காங்கிரசுக்குப் பலத்த தோல்வி ஏற்பட்டுள்ளது.

தோல்வியால் ஏற்பட்ட அவமானத்தை மறைப்பதற்கியலாதோர், மற்றொரு சிக்கலைக் கிளப்பிக் குளிர்காய நினைக்கின்றனர்.

29-4-59 அன்று நடக்கவிருக்கும் மேயர் தேர்தலில்தான் அந்தச் சிக்கலை உருவாக்க நினைக்கின்றனர். கழகத்திற்கு 45 இடங்களும் காங்கிரசிற்கு 37 இடங்களும் கிடைத்துள எந்தக் கட்சியும் தனித்த பெரும்பான்மை பெறவில்லை. எனவே தனிப்பெரும் இயக்கமான தி மு கழகமே நகராட்சியை மேற்கொள்வதுதான் முறையாகும்; ஜனநாயக மரபாகும். ஆனால் ஜனநாயக மரபை மறந்த காங்கிரஸ் தானும் போட்டி போடாது, தக்க வழியும் போகாது குறுக்கு வழியைக் கையாள்கின்றது.

சுயேச்சை அபேட்சகர் யாரும் நிறுத்தப்படின் அவருக்கு ஆதரவாக வாக்களிக்குமாம் காங்கிரசு. தான் தோற்றதால் ஜனநாயக மரபையே சாகடிக்கும் அருந்துணர்களின் பாசறைதான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியோ?

மேயர் தேர்தல்பற்றித் தன் மேலான கருத்தைத் தெரிவிக்க ம. பொ. சி. கழகமும் வந்துவிட்டது. பத்துப் பிள்ளை பெற்ற வாழ்வரசிக்கு, மலடி ஒருத்தி யோசனை சொல்லப் புறப்பட்டாளாம். அந்தத் திருக்கூத்தினை நடத்திக் காட்டுகிறது சிவஞானம் கழகம். ஐய்யகோ! தமிழக அரசியல் வாழ்வுக்கு வந்ததே ஆபத்து. தம்மை ஒரு "கலாச்சார ஸ்தாபனத் தலைவர்" என்று சொல்லிக்கொள்ளும் ம. பொ. சி. அவர்கள் ஏன் இந்த வேண்டாத வேலைகளில் எல்லாம் தலையிட்டு உடம்பை அலட்டிக்கொள்கிறார். பாபம்! உள்ள ஒன்றும் உதிரப் போகிறது; எச்சரிக்கையாக இருக்கட்டும்!

ஆக, இந்த நிலையில் நாம் எல்லோர் கவனத்தையும் திருப்பிவிட்டோம் என்பது வெளிப்படை. மேயர் யார் என்பது பெரும் பிரச்னையாகிவிட்டது. உள்ள இந்நிலையை நன்கு ஆய்ந்து பார்த்துச் சொல்கிறோம். சுயேச்சைகள் தீயசக்திகளால் பாழடிக்கப்படுவது கூடாது என்றால், நகரில் உள்ள சுயேச்சைகள் தங்களின் ஆற்றலைக் காங்கிரசின் ஆக்கத்திற்குப் பலியாக்கி விடக் கூடாது.

சுயேச்சையாளர்களே! திருச்சியிலே காங்கிரசை நம்பிய டாக்டர் மதுரம் பெற்ற பாடம் உங்கட்கு நினைவிருக்கட்டும்!

அடுத்து, பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினர் ஜனநாயகத்தின் அர்சங்களைப் பரிசீலிக்கக் கடமைப்பட்டுள்ளனர். அகில இந்திய ரீதியில் அவர்கள் காங்கிரசை எதிர்ப்பதாகப் பேசப்படுகின்றது. உண்மையிலேயே காங்கிரசின் ஆதிக்கம் ஒழிந்து ஜனநாயகம் தழைக்க வேண்டுமெனின் இந்தத் தருணத்தில் அவர்கள் நடக்கும் பாதையைப் பொருத்துத்தான் அது இருக்கிறது.

அடுத்து, சோஷலிஸ்ட் கட்சியினர், நல்ல முடிவெடுத்திருக்கின்றனர். காலத்தோடு ஒட்டிச் செல்வதிலும் காங்கிரசை வீழ்த்துவதிலும் அவர்கட்குள்ள பற்றை, தலைவர் திரு. அந்தோணி (பிள்ளை) எம். பி. அவர்களின் கூற்று தெளிவுபடுத்துகின்றது. ஜனநாயகத்தைப் புரக்கும் அவர்க்கு நம் நன்றியும் பாராட்டும்.

ஜனநாயகத்தின் வாழ்வு தாழ்வு பற்றிய இப்பலப் பரிட்சையின் முடிவு தான் என்ன?

முடிவு எதுவாயினும் என்ன? ஜனநாயகம் காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகம் அயராது உழைத்தது; உழைக்கிறது; உழைக்கும்.

நகராட்சித் தேர்தல் என்றால் வண்டிகள் பறக்கும்; பணம் உருளும் என்று இருக்கும் நேரத்திலே தங்கள் தொண்டை மட்டும் நம்பி இறங்கினர் நம் தோழர்கள். மாவட்டத் துணைச்செயலாளர், செங்குட்டுவன் விடிகூட ஓய்வின்றி அலைந்தார்; நடிகமணி நாராயணசாமி தெருவுக்குத் தெருச் சென்றார்; பேசினார். வீடுதோறும் சென்று தாய்மார்களைக் கண்டார்; தோழர்களைக் கண்டார்; கொள்கைகளை எடுத்துச்சொன்னார். அவர் ஒருவர் மட்டும் 85 கூட்டங்கள் பேசியிருக்கிறார் என்றால் பார்த்துக்கொள்க. இலட்சிய நடிகரும் புரட்சி நடிகரும் அழைத்தபோதெல்லாம் கூட்டங்கள் பேசினர். இரவுதோறும் கூட்டங்களில் அவர்கள் முழங்கிய முழக்கத்தை மறக்க முடியாது. எத்தனையோ இரவல் சரக்குகள் அவர்களை ஏளனப்பார்வை பார்த்தும், அவர்கள் அஞ்சவில்லை. மதுரையிலிருந்து முத்து வந்தார்; திருச்சியிலிருந்து அம்பில் தர்மு வந்தார். நகரெங்கும் உள்ள தோழர்கள் கட்டுப்பாடாக உழைத்தனர். அதன் பயனை இன்று காண்கிறோம்; மெத்த மகிழ்ச்சி!

சென்னை வாழ்மக்கள் சர்வாதிகாரத்திற்கு மரண அடிகொடுத்துவிட்டு, ஜனநாயகத்திற்கு வாய்ப்பளித்திருக்கும் தருணம் இது. இந்தப் புதுமையை—எழுச்சியை—குறுக்கு வழியால் வென்றிட நினைக்கும் கீழ்மதியினரைத் தலைநகரம் இன்னும் தாங்கப்போகிறதா? தள்ளப்போகிறதா? காலம்தான் சொல்லவேண்டும். ★

— 1 ம் பக்கத் தொடர்ச்சி —

விடக் கூலிப்படை நடத்தியிருக்கிறது, ஒரு கூட்டம்.

• மெரினாத் தொகுதியில் தி மு க. சார்பில் திருமதி அலமேலு அப்பாத்துரையார் • அவர்கள் சென்னைப் பெருநகராட்சித் தேர்தலுக்கு நின்றார்கள். அவரை எதிர்த்துக் காங்கிரசும் பிறவும் போட்டியிட்டன.

கூலிக்கு ஆள் பிடித்துத் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டனர் பிறர். அம்மையார்க்கோ "ஏழையர் பட்டாளம்" திரண்டு வந்தது. அவர்களுக்கு அம்மையாரோ, தி. மு. கழகமோ ஒரு 'சிங்கள் டீ'கூட வாங்கித்தரவில்லை. எல்லாரும் தம் தம் ஆர்வத்தால் ஈடுபட்டனர்; ஆற்றலைக் காட்டினர். பிறர் ஆசைகாட்டியும் மயங்காது கொண்ட கொள்கைக்காகப் பாடுபட்ட அன்னாரின் பொன்னன பணிகள் வன்னெஞ்சரின் கண்களைக் குத்தினபோலும். குத்திக் கிழித்தனர், கழகத் தொண்டர்களை.

"அம்மா" என்று வட்டாரமக்களால் அன்பாக அழைக்கப்படும் திருமதி அலமேலு அப்பாத்துரையார் இவற்றை எல்லாம் கண்டஞ்சக்கூடியவரில்லை. "அப்பா" அவர்களின் தியாகப்பணியில் உடன் நின்று தொடக்க காலம் தொட்டுப் பாடுபட்டு வரக்கூடியவர் அவர். அரியக் குடியில் பிறந்த இவர், தமிழக்குடியின் வாழ்வுக்குப் பாடுபடும் பன்மொழிப்புலவர் அப்பாத்துரையாரின் வாழ்க்கைத் துணைவியானார். பன்மொழிப் புலவர் அவர்கள் கோனுபட்டில் பணியாற்றியபின் சென்னைக்குக் குடியேறினார்கள். அங்கே அம்மாவின் அகத்தே எழுந்துகொண்டிருந்த இனஉணர்ச்சி, இங்கே கொழுந்து விட்டெரியத் தொடங்கிற்று! திராவிடர் நல்வாழ்வுக்கான நடவடிக்கைகளில் தவறாது ஈடுபட்டு வந்தார்கள். 1948-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரின் ஒரு பகுதி, அண்ணாவைத் தளபதியாகக் கொண்டு நடந்த பள்ளிகளின்முன் மறியல் செய்ததாகும். சென்னை-தொண்டைமண்டலத் துளுவ வேளாளர் உயர்நிலைப்பள்ளி, இந்து தியாலாஜிக்கல் உயர்நிலைப்பள்ளி, முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளிலும் நாள்தவறாமல் சென்று மறியல் செய்தார்கள். மற்றும் இந்தி அழிப்புப் போர், குலக்கல்வித் திட்ட எதிர்ப்புப் போர், ஆகியவற்றில் முன்நின்ற இவர், டாக்டர் அம்பேத்காரின் இந்துமதச் சட்ட மசோதாவுக்கு ஆதரவாக அறிஞர் அண்ணா அவர்கள் கட்டளையின்படி பெண்டிர் மாநாடொன்றையும் கூட்டினார்.

கழகக் கருத்துக்களை விளக்க பெண்டிர் பலரைச் சேர்த்துக் கொண்டு, அவர்கள் முதலாவது மாநில மாநாட்டில் நாடகம் நடத்தியதும், திராவிடத் தாய்மார்களிடமிருந்து தி. மு. க. தேர்தல் நிதிக்காக ரூ. 1101 திரட்டித் தந்ததும் குறிப்பிடக்கூடியன.

இவ்வாறு பொதுப்பணிகளில் இடைவிடாது ஈடுபட்ட அம்மையார், 1955-ம் ஆண்டு நிகழ்ந்த சென்னை நகராட்சித் தேர்தலில் தனித்து நின்று அப்போதைய 44-ம் வட்டத்திற்குப் போட்டியிட்டார். ஆனால் எதிர்பாராது தோற்றார். மறுபடியும் இம்முறை 74-ம் வட்டத்தில் தி.மு.க. அபேட்சகராய் நின்றார்கள். ஆர்வமும் அஞ்சாநெஞ்சமும் கொண்ட அம்மையாரின் பின் பல்லாயிரம் தோழர்கள் நிற்பதைக் கண்ட 'கோடீசுவரர்கள்' குமுறினர்; பணத்திற்கும் மயங்காத இவர்களை அடித்து உதைத்தால்தான் திருந்துவர் என்றெண்ணினரோ, யாதோ? அம்மையாருக்கு உழைத்த தோழர்கள் கரமும் தலையும் சிதைக்கப்பட்டிருக்கின்றனர். படங்களைப் பாருங்கள்...அந்த இரு தோழர்களும் காருண்யசீலர்களின் கைத்தடிகளால் "ரத்த ஸ்நானம்" பெற்றுக்கொண்ட ஏழைகள்! அவர்கள் நெற்றியிலும் கைகளிலும் வடியும் குருதியால்தானா வெறியர்களின் தாகம் அடங்கும்? மற்றொரு அவலக் காட்சி இது. மக்களுக்கெல்லாம் மாளிகைகளும் சோலைகளும் கட்டித் தரப் போவதாக ஆசை மொழி கூறியோர் அதைக் காற்றோடு பறக்கவிட்டனர். காரைக் கட்டு வீடுகள்தான் கிடைக்கவில்லை; தாமே கட்டிக்கொண்ட ஓலைக் குடிசைகளிலாகிலும் அன்னாரை வாழவிடக்கூடாதா? தி. மு. கழகத்திற்கு இந்தக் குடிசைக்காரர்கள் உழைத்ததால், வெறி பிடித்து, கூலிகளை ஏவிக் கூரைகளைப் பிரிக்கச் சொல்லியிருக்கின்றனர். நிழல் ஓரளவு தரும் அக்குடிசையையும் இழந்து அன்னார் வாடுவதைக் காண்க. • பானைகள் உடைக்கப்பட்டுத் தூளாகிக் கிடப்பதையும் காண்க. இதுதான் காங்கிரஸ் மாளிகைக்காரர்களின் "குடிசை ஒழிப்பா?"

என்றாலும் திருமதி அலமேலு அப்பாத்துரையார் வெற்றி பெற்றுவிட்டார்கள். அந்த வெற்றியைத் தேடித் தந்த அஞ்சா நெஞ்சம் படைத்த தோழர்களே! உங்களுக்கு எங்கள் வணக்கமும் வாழ்த்துக்களும்!

வாகை சூடிய மறக்குல மாதாவே! தங்கள் தொண்டால் சிறக்கட்டும் மெரினா வட்டம்!

கைக்கூலிகளே! நீங்கள் ஆயிரம் கொடுமைகள் இழைப்பினும் அஞ்சோம்; அயரோம்! ★




மெரினாவில் வென்ற அலமேலு அம்மையாரும் அவர்தம் கணவரான அப்பாத்துரையாரும்.

# சிவகெங்கைச் சீமை

## காட்சிகள்

★★★★★★★★★★★★★★★★

களம் செல்லும்



"வாளும் வேலும் எங்கள் உடைமை! மானமொன்றே எம்மூச்சு! மானம் அழிந்தபின் வாழ்வது ஏது? மாற்றாரை மாய்க்க, மனத்திலே உரமும் மார்பிலே திறமும் இருக்கும் மட்டும் மானத்திற்குத் தாழ்வில்லை; அழிவில்லை!" என்ற உயிர்க்கொள்கை கொண்ட சிவகெங்கை மருதரசர்களுள் மூத்தவர் இவர். போர்க்களங்களே இவரது வாணாளின் பெரும் பகுதியை விழுங்கியிருக்கிறது. இறுதிப்போருக்கு- ஆங்கிலேய எதிர்ப்புக் களத்திற்கு, படை நடத்தப் புறப் படும் இவர்

**பெரியமருது.**

★★★★★★★★★★★★★★★

★




★

"வாளெடுத்து, வேலெடுத்து, வளமார் திராவிடத்துப் புகழ்காத்து வாழ்ந்த மறமாந்தர் பரம்பரை நான்! உரிமைக் கொடிகாட்டி, செல்வவளம் செழித்து, கன்னல் மொழி வளர்த்து, கடல்சூழ் இவ்வுலகத்துத் தலைநிமிர்ந்து நிற்பதும் எம்நிலம்! ஆமையாய், ஊமையாய் அடங்கிடோம் சிவகெங்கைச் சீமை வாழ் நாங்கள்!" என்கிறாரா, சூளுரைத்து வாளுறை கழிக்கும்

**முத்தழகு.**

★★★★★★★★★★★★★★★

கடமை வீரர்கள்.



அண்ணனுக்கு உறுதுணையாய், ஆற்றல்மிகு வீரனாய், காளையார் கோவில் போரிலே ஆங்கிலேயரை அதிரடித்த திறல்மறவர் இவர். வெள்ளையரும் நடுங்க, வ[illegible]ரி வீசும். திறம் படைத்தவர் இவர். கடமை ஒன்றே நோக்காய், வீரக்கழல் பூண்டு களம் செல்லும் இவர்

**சின்னமருது.**

★★★★★★★★★★★★★★★

# பிளேட்டோ வகுத்த வழி

வளர்ச்சியடைந்துள்ள இன்றைய அரசியல் கருத்துக்கள் கிறிஸ்து பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்கப் பேரரசில் தோன்றியிருக்கின்றன. இன்றைய தினம் பேசப்படுகின்ற ஜனநாயகம், ஓட்டுரிமை, ஊராட்சி மன்றம், பேராட்சி மன்றம் முதலியவை கிரேக்க நாட்டிலிருந்து புறப்பட்டுத்தான் ஐரோப்பிய நாடுகளில் புகுந்தன.

சாக்ரடீஸ் கிரேக்க நாட்டு மக்களைச் சிந்திக்கத் தூண்டினான். "ஏன் என்று கேள்! எப்படி என்று ஆராய்ந்து பார்! நீ உண்மையை உணர்ந்துகொள்ளலாம்!" என்று போதித்தான் சாக்ரடீஸ். ஆனால் சாக்ரடீஸ் தன்னுடைய தத்துவங்களையும் கருத்துக்களையும் புத்தகத்தின் வாயிலாக எடுத்துரைக்கவில்லை. எனவேதான் அவருடைய அத்தனை கருத்துக்களையும் சுவைக்கக்கூடிய வாய்ப்பு பிற்கால சந்ததியாருக்குக் கிடைக்கவில்லை. அறிஞர்கள் பலரால் தத்துவவிளக்கக் கல்விக்கூடங்கள் (Philosophical Schools) பல ஏற்படுத்தப்பட்டன. அதன் மூலம் கிரேக்க மாணவர்கள் மட்டுமல்லாமல் உலகமெங்குமிருந்து சென்ற பலர் அந்தப் பள்ளிகளில் அறிவு விளக்கம் பெற்றனர். இந்தத் தத்துவ விளக்க கல்விக்கூடத்தை முதன் முதலில் தொடங்கிய பெருமை **இஸக்ரேட்டஸ்** என்பவரைச் சாரும். அவருக்குப் பிறகு பிளேட்டோ என்ற தத்துவஞானி ஒரு கல்விக் கூடத்தை அமைத்து தத்துவ போதனை செய்துகொண்டிருந்தார். "தத்துவ விளக்கம், அரசியல் அறிவு, சமூகப் பிரச்னைகள் முதலிய துறைகளில் பிளேட்டோ அரிஸ்டாட்டில் ஆகிய இருவர்களது எழுத்துக்கள்தாம் ஐரோப்பிய சமுதாயத்திற்கே வழிகாட்டியாக விளங்கின" என்று அறிஞர் **சபைன்** கூறுகிறார். அரசியல் கருத்துக்களின் வளர்ச்சி பிளேட்டோவிடமிருந்துதான் ஆரம்பமாகிறது. கி.மு. 427-ம் ஆண்டு பிறந்த பிளேட்டோ சாக்ரடீஸுடன் நெருங்கிய தொடர்பு கொண்டார் சாக்ரடீஸுடன் நெருங்கிப் பழகி அறிவுக் கருத்துக்கள் பலவற்றை அவரிடம் கற்று அவருடைய மாணவரானார். சாக்ரடீஸ் கொலை செய்யப்பட்ட பிறகு பிளேட்டோ தன்னுடைய கருத்துக்களைப் பரப்ப ஆரம்பித்தார். பிளேட்டோவினுடைய முக்கியமான அரசியல் கருத்துக்கள் 'குடியரசு' என்ற புத்தகத்திலே குறிக்கப்பட்டிருக்கின்றன.


ஒரு நல்ல மனிதனைப் பார்க்க ஒரு நல்ல நாட்டிற்குச் செல்லவேண்டும் என்கிறான் பிளேட்டோ. நாடு நல்ல நாடாக இருந்தால் அந்த நாட்டு மக்களும் நல்லவர்களாக இருப்பார்கள் என்பது பிளேட்டோவின் அபிப்பிராயம். நாடு மிகவும் கீழ்த்தரமான நிலையில் இருந்தால் அந்த நாட்டு மக்களும் கீழ்த்தரக் குடியினராக இருப்பர் என்பது பிளேட்டோவின் வாதம். ஜனநாயகத்தை அறவே கண்டிக்கிறான் பிளேட்டோ. ஜனநாயகம் நாட்டிற்கோ நாட்டு மக்களுக்கோ நல்லது செய்யத் தவறிவிட்டது. எனவே ஜனநாயகம் விரும்பத்தகாத ஒரு அரசியல் அமைப்பு என்கிறான் பிளேட்டோ ஜனநாயகத்தை சாடுவதற்கு காரணமிருக்கிறது. சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ் நஞ்சு கொடுத்துக் கொல்லப்பட்டார். நீதிமன்றத்தின் உத்தரவிற்கிணங்க மாபெரும் சிந்தனையாளனை, ஏதென்ஸ் நகரம் ஜனநாயக அமைப்பு முறையைத்தான் தனது ஆட்சி முறையாக கொண்டிருந்தது. அந்த ஏதென்ஸ்தான் மன்னிக்க முடியாத பிழையைச் செய்தது. சாக்ரடீஸைக் கொன்ற அத்தலைய ஜனநாயகம் ஏதென்ஸ்க்கு தேவையில்லை எனக் கூறுகிறான் பிளேட்டோ. "ஜனநாயக ஆட்சி முறையைக் கொண்டுள்ள நாட்டில்தான் ஒரு கட்சியின் சர்வாதிகாரம், ஆதிக்க வெறி கோலோச்சுகிறது; ஜனநாயக நாட்டில் அரசியலைப்பற்றித் தெரியாதவர்களும், படிக்காத பாமரர்களும், ஒன்றும் தெரியாத உதவாக்கரைகளும் கட்சியின் சார்பில் போட்டியிட்டு நாட்டை ஆளுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். எனவேதான் ஜனநாயகம் தேவையில்லை" என முழங்குகிறான் பிளேட்டோ. எந்த ஒரு நாட்டை எடுத்தாலும் அந்த நாட்டு மக்கள் பணக்காரன், ஏழை என்ற இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த இரண்டு வகுப்பாரும் பொருளாதார அடிப்படையில் சொத்துரிமையைக் கொண்டு பணக்காரன் ஏழை என்று பிரிக்கப்படுகின்றனர். எனவே பணக்காரன் ஏழை இந்த இரண்டு வகுப்பாருக்கும் நடைபெற்ற, நடைபெறுகின்ற, நடைபெறப் போகின்ற போராட்டம் **சொத்துரிமையின்** அடிப்படையில்தான் எழுந்தது; எழுகிறது; எழும். இந்தப் போராட்டத்தின் காரணமாகவே நல்லதொரு நாடு நல்லதொரு நிலைமை அடைய வசதி வாய்ப்பு இல்லாமல் தவிக்கிறது. இந்த நல்ல நிலையை அடைவதற்கு சிறந்த அரசியல் வாதியானவன் சொத்துரிமையாகிய அந்த அடிப்படை ஊழலைத் தகர்த்தெறிய வேண்டும் என்று பிளேட்டோ கூறுகிறான். எவ்வாறு மருத்துவன் நோயாளிக்கு உள்ள குறைபாடுகளை உணர்ந்து அதை மருந்தின்மூலம் அகற்றுகிறானோ அதுபோல் நல்லதொரு அரசியல் வாதி நாட்டின் நலனுக்குக் குறுக்கே நிற்கின்ற குறைபாடுகளை அகற்ற வேண்டும் என்பது பிளேட்டோவின் வாதம். அப்படிக் குறைபாடுகளை பார்க்கும்பொழுது பிளேட்டோவின் கண்களுக்கு அதாவது தனி **நபர் சொத்துரிமை, குடும்பம் அதாவது** ஒருவன் ஒருத்தியைத் திருமணம் செய்துகொண்டு வாழ்தல் ஆகிய இரண்டும் நாட்டின் நலனுக்கு குறுக்கே நிற்பனவாகத் தோன்றுகின்றன.

சொத்துரிமை தேவையில்லை என்பதற்கு, பிளேட்டோ சில அருமையான காரணங்களைக் காட்டுகிறார். தனி நபருக்குச் சொந்தமாக வீடுகளோ, நிலங்களோ அல்லது ரொக்கமாகப் பணமோ இருக்கக் கூடாது. இவைகளெல்லாம் மனிதனின் ஆசையைத் தூண்டிவிடும் சக்தி பெற்றவை. தனிப்பட்ட நபருக்குச் சொந்தமாக வீடோ நிலமோ இருந்தால் மனிதன் அதை இன்னும் அதிகமாக்க வேண்டும் என்ற ஒருவிதப் பேராசையில் நாட்டிற்கு நல்லதை செய்ய மறந்திடுவான். அவனுடைய முழு நேர சக்தியும் உழைப்பும் தன்னுடைய சொத்துக்களையும் உடைமைகளையும் அதிகமாக்கவேண்டிய ஒரு பேராசை பிடித்த கீழ்த்தரமான ஒருவிதக் கொள்கைக்குத் தன்னை அடிமையாக்கிவிடுவான் தன் சொத்து, தன் வீடு, தன் பணம் என்று இருப்பவனிடம் நாட்டுப் பற்றையோ தேச சேவையையோ எதிர்பார்க்க முடியாது. எனவே எல்லா நிலங்களும் வீடுகளும் பொதுச்சொத்து என்றபடி இருக்க வேண்டும். இதுவே பிளேட்டோவின் கருத்து. கார்ல்மார்க்ஸின் பொருளாதார விளக்கத்தை கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே பிளேட்டோ கூறுகிறான். ஆனால் பிளேட்டோவின் கம்யூனிஸக் கொள்கை கார்ல்மார்க்ஸின் கம்யூனிஸக் கொள்கையை விட மாறுபட்டது. கார்ல்மார்க்ஸ் பொருளாதார அடிப்படையில் தன்னுடைய கம்யூனிஸக் கொள்கையை வகுத்தான். சமுதாயத்தில் உள்ள ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வுகள் ஒழிய வேண்டும் என்பதற்காக மார்க்ஸ் தனி நபருக்கு எதுவும் சொந்தமாக இருக்கக் கூடாது என்று கூறினான். பிளேட்டோ "பணக்காரன் ஏழை என்ற இருவகுப்பாரும்தேவையில்லை. எனவே அவர்களை ஒழிப்பது தகாது" என்று கூறவில்லை. ஆனால் ஒரு நாடு நல்ல நிலைமையில் இருப்பதற்குச் சொத்துரிமை தடையாக இருக்கிறது. எனவே அதை ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறான். அரசியல் நோக்கமே பிளேட்டோவின் கருத்தே தவிர பொருளாதார நோக்கம் இல்லை. எனவேதான் பிளேட்டோவின் கம்யூனிஸம் அரசியல் நோக்கத்துடன் எழுப்பப்பட்டது என்பது தெற்றென விளங்குகின்றது.

ஒருவன் ஒருத்தியைத் திருமணம் செய்துகொண்டு பிள்ளைகளைப்பெற்று இல்லற வாழ்க்கை நடத்துவதைப் பிளேட்டோ வன்மையாகக் கண்டிக்கிறான். மனிதன் மனதில் சூது, வஞ்சகம், பொறாமை முதலியவை தோன்றுவதற்குக் காரணம் இந்தச் சமூக அமைப்பு முறை அல்லது இல்லற வாழ்க்கைதான் என்பது பிளேட்டோவின் கூற்று. மனைவி—பிள்ளை என்று ஒரு பந்தம் ஏற்பட்டவுடன் மனிதன் மிகக் குறுகிய இடத்திற்குள் அடைக்கப்படுகிறான். தன்னுடைய மனைவி மக்கள் வாழ எல்லாவித துர்ப்போதனைகளுக்கும் ஆசைகளுக்கும் அவன் இணங்க வேண்டியதிருக்கிறது. இல்லற வாழ்க்கையை ஏற்று நடத்தும்பொழுது தன் பெண்டு, தன் பிள்ளை என்கின்ற ஒரு குறுகிய வலைக்குள் தள்ளப்படுகிறான். தீய வழிகளையும் பின்பற்றிப் பொருள் சேர்க்க அவனது மனம் நாடுகிறது. எனவேதான், குடும்ப அமைப்பு முறையை வன்மையாகத் தாக்குகிறான் பிளேட்டோ. நாட்டின் நலனுக்கு ஊறு கொடுக்கும் இந்த இரண்டும் களைந்தெறியப்பட வேண்டும். வீடு, நிலம், பெண்கள் இவைகளெல்லாம் பொதுச் சொத்தாக இருக்க வேண்டும் ஒரு நாட்டில் எனக் கூறுகிறான். தனி நபருக்குச் சொந்தமாகச் சொத்து முதல் மனைவி வரை ஒன்றும் இருக்கக்கூடாது.

சமுதாயத்தைப்பற்றி பிளேட்டோ கூறும்பொழுது மக்கட் சமுதாயம் மூன்று பிரிவுகளாக இருக்கின்றது என்கிறான். இயற்கையிலேயே வேலை செய்வதற்கென்று படைக்கப்பட்டவர், ஒரு சாரார். பிறருடைய கட்டளையின் கீழ் வேலை செய்யக் காத்திருக்கக்கூடிய மற்றொரு சாரார். அரசியல் அதிகாரங்களை பிரயோகிப்பதில் வல்ல அதாவது நாட்டை ஆளத் தகுதிபெற்ற பிறிதொரு சாரர். இம்மூன்று பிரிவினருள் கடைசிப் பிரிவினர் அதாவது நாட்டை ஆள்வதற்குத் தகுதியுடைய திறமையுள்ள பிரிவினரிடம்தான் நாட்டின்நிர்வாகம் ஒப்படைக்கப்பட வேண்டும். திறமை படைத்தவர்கள் அதாவது அறிவு படைத்தவர்களிடம் அப்படி நாடு ஒப்படைக்கப்படுவதால் சட்டம் தேவையில்லை எனக் கூறுகிறான் பிளேட்டோ. நாட்டு மக்களுக்கு நல்லது புரியவும் அவர்களை நல்வழியில் செலுத்தவும் சட்டம் தேவைப்படுகிறது. ஆனால் அறிவும் ஆற்றலும், திறமையும் மிக்க ஒருவனிடம் ஆட்சி அதிகாரம் இருக்கும்பொழுது அங்கு சட்டம் தேவையில்லை என்கிறார். ஏனென்றால் திறமை மிக்க அந்த நபர் எதைச் செய்தால் மக்கள் நலம் பெறுவர் என்பதை அறிந்து அதனை அவன் செய்வான். ஆகவே சட்டம் தேவையில்லை என்கிறான் பிளேட்டோ. ஆனால் தனது அந்திய காலத்தில் பிளேட்டோ மேற்கூறிய கருத்தை மறுத்துப் பேசுகிறான். ஒரு நாட்டு மக்களின் நலனுக்குச் செம்மையான வாழ்க்கைக்குச் சட்டம் தேவைப்படுகிறது என்பதை பின்பு கூறுகிறான். ஆனால் முதன் முதலில் 'குடியரசு'வில் தனது இலட்சிய நாடு எப்படி இருக்க வேண்டு என்று வர்ணிக்கும் பொழுது மேற்கூறிய கருத்துக்களைச் சொல்லி, அந்த நாட்டின் அதிகாரம் அறிவுமிக்க ஆற்றல் மிக்க ஒருவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பிளேட்டோ கூறுகிறான். பிளேட்டோவின் கம்யூனிஸம் போன்ற சில கருத்துக்களை அவனது மாணவனும் அவனுக்குப் பிறகு வந்த கிரேக்க அறிஞனும் மாவீரன் அலெக்ஸாண்டரின் ஆசிரியருமான அரிஸ்ட்டாட்டில் ஒத்துக்கொள்ளவில்லை.

—ஜோசப் பெஸ்கி, பி. ஏ.



சென்னை நகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்ற தோழர்களைப் பாராட்டி இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். அளித்த விருந்துபசாரத்தில் அண்ணா, வி. பி. இராமன், கண்ணதாசன், எஸ். எஸ். ஆர்., இராதாமணாளன் முதலியோர்.

# ★ புலவர் படும் பாடு ★

புலவர்கள் புரவலர்களினும் மேம்பட்டவர்கள் என்று இலக்கியங்கள் கூறுகின்றன. அவ்வாறிருந்தும் புலவர்கள் புரவலர்களிடம் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமன்று. 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்று புகழப்பட்டு வந்த நேரத்திலும், புலவாகள் துன்புற்றிருக்கிறார்கள்; துயருற்றிருக்கிறார்கள். புலவர்களை வறுமை வகையாகச் சூழ்ந்து குடும்பம் நடத்தியிருக்கிறது.

தங்கள் வறுமையை ஒழிக்க வேண்டிப் புலவர்கள் வள்ளல்களை அணுகி அவர் தம் புகழுரையைப் பொன்கவியால் பாட நேர்ந்தது. சில பொறுப்புள்ளவர்கள் புலவர்களை ஆதரித்து, பொருள் தந்து புலவர்க்கும் மதிப்புத்தந்து, தமக்கும் மதிப்புத் தேடிக்கொள்வர். வேறு சில 'புண்ணியாத்மாக்கள்' புலவர் வருகிறார் என்றால், வீட்டுக்குள் ஓடிக் கதவைச் சாத்திக்கொண்டு, புலவர் போய்விட்டார் என்பதறிந்து வெளியில் வருவார்கள். மற்றும் புலவரிடமிருந்து தாம் பொருள் பெற எண்ணுங் கடைக்குணம் கொண்டோரும் இருந்ததுண்டு. ஒரு சிறிய அளவு பரிசிலை வழங்கிவிட்டு அந்தச் செய்தி செகமெலாம் தெரிய வேண்டும் என்றெண்ணிய சிறு மதியாளரும் உண்டு. பரிசில் வழங்கியதால் கணவனும் மனைவியும் 'போர்ப்பிரகடனம்' செய்ததுமுண்டு.

ஒரு புலவர்; வெண்பா பாடுவதில் சிறந்தவர். ஒரு வள்ளலை நாடிப் போனார். அந்த வள்ளல் புலவரைப் பார்த்தவுடன் தெரிந்துகொண்டார், அவர் வெண்பாப் பாடுபவரென்று. அதனால், புலவர் அங்கு வந்தவுடன் அவரைப் பார்த்து, 'வெண்பாச் சொல் கவிஞரே! எங்கே வந்தீர்கள்' என்று கேட்டார். உடனே புலவர், 'தங்கள்மீது மெய்யான தமிழ்ப்பாடல் பாடிவந்தேன்' என்று சொன்னார். அவ்வளவுதான்; வள்ளலுக்கு அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது. அதிர்ச்சிக்குக் காரணம் இல்லாமலில்லை. வள்ளல், தனது வள்ளல் தன்மையைப் புலவருக்கு விளக்குகிறார். "ஐயா, புலவரே தாங்கள் சொல்வது மிகவும் நேர்த்தியாக இருக்கிறது. நீர் வருவதற்குச் சிறிது நாட்களுக்கு முன்பு ஒரு புலவர் என்மீது நானூறு பாடல் பாடிவந்தார். அதைக் கேட்ட நான் மிகவும் பிரியப்பட்டு மூன்று படிப் பெருவரகு கொடுத்து அவரைச் சிறப்பித்தேன். அந்த நிகழ்ச்சியால் என் வீட்டில் என்ன நேர்ந்தது என்பதை இந்த நாடே அறியும். இருந்தாலும் உம்மிடம் சொல்லுகிறேன். மூன்று படிப் பெரு வரகு கொடுத்ததைப் பார்த்த என் மனைவி, அந்நிகழ்ச்சியையெண்ணி, மூன்று முறை தற்கொலை செய்து கொள்ளச் சென்றாள்; அவளைக் காப்பாற்ற நான் பட்ட சிரமம் கொஞ்சமல்ல. இது தெரிந்தும், 'நான் ஒரு புலவன், தங்கள்மீது தமிழ்ப்பாடல் பாடி வந்தேன்' என்று சொல்லி வருகிறீரே! போம், ஐயா, போம்" என்று சொன்னார் வள்ளல்.

இதைக் கேட்டதும் புலவர் மனம் நொந்து, படைத்தவன் என்று தான் எண்ணுபவரிடம் கேட்கிறார், "புலியாடு புலியரோடு போராடவா படைத்தாய்" – இந்தக் கீழ்மக்களொடு சண்டையிடவா படைத்தாய், என்று! தமிழ் அவமதிக்கப்படுகிறது. தமிழ்ப்புலவர் அவமதிக்கப்படுகிறார். புலவர் தாம் சென்றுவந்த நிகழ்ச்சியைப் பாட்டாய் வடித்துள்ளார். பாடல் இது:

வெண்பாச்சொல் கவிஞரே
வந்ததேதும்
மீதுமெய்த் தமிழ்ப்பாடி
வந்தோம்
வெகுநேர்த்தி முன்னமே
நானூறு கோவையொரு
வித்துவான் பாடிவந்தான்
நண்பாக மனர்வைத்து
மூன்றுபடி பெருவரகு
நான்கொடுத்தே னதற்கிந்
நாடெலாந் தெரியுமென்
மனையாட்டி மூன்றுதர
நான்று கொண்
டுயிர்பிழைத்த
புண்பாடெலா மறிந்தின்ன
நீர் கவிசொலும்
புலவரென் றிங்குவந்திர்
போம்போ மெனச்சொலிப்
புலியாடு புலியரோடு
போராடவோ படைத்தாய்.

.........................................

.........................................

★

மற்றொரு புலவர். அவரது நிலை மிகவும் பரிதாபமானது. மனம் தெரிந்தே அவரைக் குற்றம் செய்யத் தூண்டியுள்ளது வறுமை. பல பேரை வீணாகப் புகழ்ந்து பேச நேர்ந்துவிட்டது, அவருக்கு. பின்னர் அதற்காக மனம் வருந்திப் புலம்புகிறார்.

கல்லாத ஒரு மனிதனைக் கண்டிருக்கிறார். அவன் கல்லாதவன் என்று தெரிந்தும் அவனைக் "கல்வியில் சிறந்தவனே" என்று புகழ்ந்திருக்கிறார்.

காட்டிலுள்ள மரங்களை எல்லாம் வெட்டி, காட்டைச் சரியாக்கும் ஒருவனிடம் சென்று அவனை, "தேசத்தை ஆட்சி செய்யும் திறல்மிகு வேந்தனே" என்று புகழ்ந்திருக்கிறார்.

போர் என்று கேட்டவுடனேயே வீட்டுக்குள் போய் ஒளிந்துகொள்ளும் பேடி ஒருவனை "வேங்கைப் புலியே" என்று வருணித்திருக்கிறார்.

தேய்ந்து ஒடுங்கிப்போன புஜங்கள் உடையவன் ஒருவன். அவனைப் போய் "மல்யுத்தத்திற்குத் தக்க தோள்களையுடையவனே" என்று வீண் பாராட்டுப்பாராட்டியிருக்கிறா.

ஒரு செல்லாக்காசுகூடப் பிறருக்குத் தராதவன் அவன். எச்சல் கையால்கூடக் காக்காய் ஓட்டாதவன். அத்தகைய 'சிறந்த' மனிதனைப் "பெரும் வள்ளலே" என்று கூறியிருக்கிறார்.

இவ்வாறு ஒருவனிடம், அவனிடம் இல்லாத செய்திகளை எல்லாம் சொல்லவே, அவன் "புலவரே உமக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றும் இல்லையே" என்று சொல்லிக் கையை விரித்துவிட்டான். புலவர், தானும் பொய்சொல்லி, இவ்வாறு தகுதியில்லாதவர்களைப் புகழ்ந்த குற்றத்தைச் சம்பாதித்துக்கொண்டதாகக்கூறி வருந்துகிறார். பாடல் இது.

கல்லாத வொருவனைநான்
கற்றாய் என்றேன்
காடெறியும் மறவனைநா
டாள்வா யென்றேன்
பொல்லாத ஒருவனை
நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப்
புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன்
சூம்பற் றோளை
வழங்காத கையனைநான்
வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக்
கில்லை யென்றான்
யானுமென் குற்றத்தா
லேகின் றேனே

★

இன்னொரு புலவர். மிகவும்துன்பப்பட்டவர். பல இடங்களுக்கும் அலைந்து திரிந்தும் பயன் கிட்டாமல் வாடுகின்றவர். பரிசில் கிடைக்காததனால் பட்டினி கிடக்க வேண்டிய நிலை வருகிறது. பட்டினி கிடக்காவிட்டால் வள்ளல்களைத் தேடிச் செல்கின்ற அவசியம் இல்லை என்பது அவருக்குப் புரிகிறது. படைத்தவன் பிரமன் என்று பலரும் கூறக் கேட்டிருக்கிறார். பாவர், அவரும் தன்னைப் படைத்தவன் பிரமன்தான் என்று நம்பிக்கொண்டு பிரமன்மேல் குற்றம் சாட்டுகிறார்.

"ஒரு கல்லையாவது, மண்ணையாவது காய்ச்சியாவது குடிக்கக் கற்பித்தானா? இல்லாவிட்டால் வீடு, செல்வம் இவற்றையாவது கொடுத்து நம்மைத் துன்பத்திலிருந்து காப்பாற்றினானா? எனது துன்பத்தைச் சொல்லி யாரைத்தான் நான் நோவேன். இப்படி வள்ளல் தன்மை இல்லாதவர்களை வள்ளலென்றும், ஆற்றலற்ற அற்பர்களை ஆற்றல் மிக்கவர் என்றும் பல்லைக் காட்டிச் சொல்லச் செய்து, நாமும் பிறப்பாய்ப் படைத்துவிட்டானே" என்று கூறுகிறார். பாடல் எல்லோருக்கும் தெரிந்த பாடல்தான். அது இது:

கல்லைத்தான் மண்ணைத்தான்
காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானா
இல்லைத்தான் பொன்னைத்தா
னெனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித்தானா
அல்லைத்தான் சொல்லித்தான்
ஆரைத்தான்
நோவத்தா னையோ வெங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான்
பதுமத்தான்
புவியிற்றான் பண்ணி னானே

★

செல்வந்தர் வீடு சென்று செய்யுள் பாடுவதில் மட்டும்தான் புலவர்கள் அவதிப்பட்டனர் என்றில்லை. பரிசில் வாங்கி வந்த பின்னும் புலவர் படும் பாடு சொல்ல முடிவதில்லை. ஒரு புலவர்தான் முன்பு ஓர் சிற்றரசனிடம் பொருள் கேட்க, அவன் தாராமையால் மற்றோர் பேரரசனைச் சந்தித்துப் பரிசில் கேட்க, அவன் புலவரின் தரம் அறிந்து யானை, பொன், ஆடை அணிமணி, பொருள் ஆகிய அனைத்தும் கொடுத்துச் சிறப்பித்தான். களிபேருவகையில் மிதந்தார் புலவர். மன்னனுக்கு நன்றி சொல்லிவிட்டுத் திரும்பினார். வீடு திரும்பும் வழியில், முன்பு சந்தித்தும் தனக்குப் பரிசில் தராமல் அனுப்பிய சிற்றரசன் பால் சென்றார். "உனக்கு யாம் பரிசிலாக இந்த யானையைத் தருகிறோம்" என்று சொல்லி, தாம் பரிசில் பெற்ற யானையை அந்தச் சிற்றரசனுக்கே தந்துவிட்டு வீடு வந்து சேர்ந்தார்.

★

இங்கு ஒரு சுவையான நிகழ்ச்சி. ஒரு புலவர் தன்னைப் பாணனாகவும், தன் மனைவியைப் பாணினியாகவும் வைத்து எழுதியுள்ளார்.

இராமனென்று ஒரு வள்ளல் இருந்தார். அவர் இரவலர்க்கு வரையாது கொடுப்பவர் என்று பலரும் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஒரு பாணன் மிகவும் துன்புற்றான் வாழ்க்கையில். இராமவள்ளலைச் சென்று பார்க்கலாம் என்று முடிவுபண்ணி அங்கே சென்றான். வள்ளல்அவனது பாடலைக் கேட்டார்; வியந்தார்; பலபடப் பாராட்டினார். உடனே யானை ஒன்றை அவனுக்குப் பரிசாகக் கொடுத்தார்.

பண்டைத் தமிழகத்தில் யானை பரிசாகக் கொடுக்கப்பட்டதென்றால், அத்துடன் தலைமுறை தலைமுறைக்கும் பயன்படும் ஏராளமான செல்வமும் பரிசிலாகக் கொடுக்கப்பட்டுள்ளது என்று பொருள். யானையைக் கட்டித் தீனி போட முடியுமா என்னும் பழமொழி இன்றும் வழங்குகிறது. அப்படியிருக்க அந்த நாளில் 'வறுமையால் வாடுகிறேன்" என்று சென்றவர்களுக்கு நிறையத் தீனி தின்னும் யானையை யாராவது பரிசாகத் தருவார்களா? தந்தால் ஏழைப் புலவனின் கதி என்னவாகும். அதனால் யானையுடன் ஏராளமான பொருளையும் பரிசாகத் தந்து அனுப்புவார்கள்.

பரிசிலாகப் பெற்ற யானையுடனும் பொருள்களுடனும் வீடு திரும்பினான் பாணன். யானையை வெளியே கட்டிவிட்டு, பொருள்களையும் ஒரு பக்கத்தில் மறைத்து வைத்துவிட்டு வீட்டினுள் நுழைந்தான். உள்ளே இருக்கும் பாணினி, பாணனைக் கண்டவுடன் "மிக்க புகழ்பெற்ற இராமவள்ளலைப் பற்றிப் பாடச் சென்றாயே, என்ன கொடுத்தார்? என்ன கொண்டுவந்தாய்?' என்று கேட்க, 'புதிய களபம் கொண்டு வந்தேன்' என்று யானையைக் குறிப்பிட்டான். அவள் அதைப் புரிந்து கொண்டே தன் கல்வித் திறமையைக் காட்டும் முகத்தான் களபம் எனும் சொல்லுக்கு வேறு விதமாகப் பொருள் கொண்டாள். சந்தனம் என்று பொருள் கொண்டு, "களபமென்றால் உடம்பிலே தடவுங்கள்" என்றாள். இது புரியாத பாணன் மறுபடியும் யானையைக் குறிப்பிடுவதற்காக "மாதங்கம் கொணர்ந்தேன்" என்றான். உடனே, அவள் அதற்கு 'மிகுந்த பொன்' என்று பொருள் கொண்டு. "எங்கள் தாய் வீட்டில் வறுமை ஏற்பட்டதில்லை; பொன் மணிகள் நிறையப் பார்த்திருக்கிறேன்" என்று சொன்னாள். பாணன் மீண்டும் "வேழம் கொணர்ந்தேன்" என்றான். அதற்கு அவள் 'கரும்பென்று' பொருள் கொண்டு "நன்றாகத் தின்னுங்கள்" என்றாள். பாணனின் பாடு மிகவும் சிரமமாகிவிட்டது. மறுபடியும் 'பகடுகொணர்ந்தேன்" என்றான் யானையைக் குறிக்க. அவளோ, பகடு என்றால் எருது எனப் பொருள் கொண்டு "வயலை உழவு செய்க" என்றாள். "கம்பமா கொணர்ந்தேன்" என்றான். அதற்கும் மாற்றுப் பொருள்தான் எதிரிருந்து கிடைத்தது. அவள், 'கம்பம்புல் மா'வென்று பொருள் கொண்டு "களிக் கிண்டலாம்" என்றாள். அடுத்த கணம் "கைம்மா கொண்டு வந்துள்ளேன்" என்று சொன்னான்; அவ்வளவுதான், சும்மா இருந்து விட்டாள் பாணினி. கைம்மா என்றால் யானையைத் தவிர வேறு எதையும் குறிக்காது. புலவரின், மேற்சொன்ன பாடல் இது:

இம்பர்வா னெல்லையி
ராமனை யேபாடி
என்கொணர்ந்தாய் பாணநீ
யென்றாள் பாணி
வம்பதாங்களப மென்றேன்
பூசு மென்றாள்
மாதங்க மென்றேன்யாம்
வாழ்ந்தே மென்றாள்
பம்புசீர் வேழமென்றேன்
தின்னு மென்றாள்
பகடென்றேன் உழுமென்றாள்
பழனந் தன்னை!
கம்பமா வென்றேனற்
களியா மென்றாள்
கைம்மாவென் றேன்சும்மா
கலங்கினாளே.

இவ்வாறு தமிழ் இலக்கியத்தில் புலவர் படும் பாட்டைக் கூறும் செய்யுள்கள் எண்ணற்றவை; ஆனால் அந்தத் துன்பத்திலும் அவர்களிடமிருந்து தூய பாட்டுக்கள் வெளி வந்துள்ளன. அதுதான் தமிழகத்தின் தனிப் பேறு.

—தமிழ்ப்பித்தன்.

# வினா – விடை

**க. ப. நடராசன், திருப்பூர்.**

**கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்களைப் பற்றி, அதற்கு மாறுபட்ட அமைப்பினைச்சேர்ந்த தனி ஒருவரான உம்முடைய பதிலை வைத்துத் தெரிந்துகொள்ள முடியுமா?**

கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றிய கழகக் கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது கட்டாயமல்ல. கட்டளையுமல்ல! கம்யூனிஸ்ட்களைப் பற்றி, அவர்களுடைய செயல்முறைகளின் தன்மைகளைப் பற்றி அவர்களே எழுதிவைத்திருக்கும் எண்ணற்ற புத்தகங்களையெல்லாம் படித்துப் பார்த்துவிட்டுத்தான், கம்யூனிஸ்ட்களைப்பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன். கம்யூனிஸ்ட் தலைவர்களின் பேச்சையும் எழுத்தையும் தவருமல் படிக்கிறேன். முன்னேற்றக் கழகத்தைத் தரக்குறைவான வார்த்தைகளால்தூற்றியிருந்தாலும் அதனைப் பொறுமையுடன், கவனத்துடன் காண்கிறேன். எந்தக் குற்றச்சாட்டும் ஆதாரத்தின் அடிப்படையிலே தரப்படுவதால் நீங்கள் ஐயப்படத் தேவையில்லை. அத்துடன் கம்யூனிஸ்ட் கட்சியினர் எவரேனும், சொல்லப்பட்டுள்ள ஆதாரங்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று இன்றுவரையிலும் மறுக்க முன் வந்ததுண்டா? கம்யூனிஸ்ட் கட்சியில் கருத்துக் கோளாறுகள் ஏராளம் உண்டு. சான்ருகச் சொல்கிறேன். நவகேரளத்து சங்கரன், கவிஞர் வள்ளத்தோல் அவர்களை மக்கள் கவிஞர் என்கிருர். ஜீவானந்தம் என்பவர் கம்பன் உலகத்தின் வழிகாட்டியெனப் புகழ்கிருர். தவறுகிருர்! சங்கரன் சொல்வது சரி. இதற்குச் சாட்சியம் வேண்டியதில்லை! இதனை எடுத்துக்காட்டுபவன் நான். நீங்கள் வேண்டும்—விரும்பும் — ஆதாரம் என்ன? இரண்டு கம்யூனிஸ்ட் தலைவர்களையும் மோதவிடுகிறேன். நீங்கள் வேடிக்கை பார்த்துக் கேலி செய்ய அல்ல. அவர்கள் கொள்கைக் குழப்பத்தைக் கணக்கிட வேண்டும் என்பதற்காக! இந்த இரண்டு தலைவர்களின் பேச்சுக்களை நீங்கள் நம்ப மறுக்கிறீர்களா? இப்படி மாறுபட்ட கருத்தினை சங்கரனும் – ஜீவானந்தமும் சொல்லவில்லையென்று நிரூபிக்கத் தயாராக இருக்கும் "காம்ரேட்" கம்யூனிஸ்ட்களைத்தான் கண்டதுண்டா? எட்டு ஆண்டுகளுக்கு முன்னுல்கூடக் கம்யூனிஸ்ட்களைச் "செம்பிடாரிகள்" "மாஸ்கோ கூலிகள்" என்று எழுதிக்காட்டிக் கொண்டிருந்த ரெ. ரெங்கசாமி என்பவர் இன்றைய தினம் 'ஜனசக்தி' பத்திரிகையின் உதவி ஆசிரியர்களிலே ஒருவர் என்ருல் கம்யூனிஸ்ட்களை கொள்கைக் குன்றுகள் என்று எப்படி ஒப்புக்கொள்வது? குற்றம் சாட்டுகிருேம். இல்லையென்று சொல்ல எந்தக் கம்யூனிஸ்டாவது முன்வர முடியுமா? நடுநிலையிலே நின்று சிந்தனை செய்து பாருங்கள். அதன் பிறகு எண்ணத்திலே கொள்ளுங்கள். எங்களுடைய விளக்கமும் உங்கட்குப் புரியும்!

**மணிவண்ணன், பெரியகுளம்.**

**கடந்த பொதுத் தேர்தலுக்கு முன் மாஸ்கோவைக் காட்டிய காம்ரேடுகள் இப்போது கேரளத்தைக் காட்டுவது ஏன்?**

கம்யூனிஸ்ட்கள், மாஸ்கோவுக்கு மண்டியிடும் மட்ட ரகமான மனப்பான்மையை இன்னும் அவர்கள் தன் மானம் காக்கும் வகையில் கைவிடவில்லை! கேரளம்பற்றிப் பேசுவது "அண்டை ராஜ்யங்களில்" ஆட்சி பீடமேறும் வாய்ப்பைத் தந்து, மக்கள் வாழ்த்துவார்கள் என்ற அவர்களின் தவருன எண்ணம்! கேரளம்பற்றிப் பேசுவதுதான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டங்களிலே ஒன்று என்பதை அஜய்கோஷ் பலமுறை அறிவித்துள்ளார்! தமிழ்நாட்டுக் கட்சியினர் ஏப்ரல் ஐந்தாம் நாளை கேரள தினமாகக் கொண்டாடினுர்கள்! வேறு வேலையில்லையே, அதனுல்தான் கேரளத்திற்கு ஆதரவு தேடிப் பணியாற்றுகின்றனர்!

★

**வீ. என். மீருக்கனி, தாராவி, பம்பாய்-17.**

**'ஜார்' மன்னனுக்கு மாரிக்கால அரண்மனையொன்று தனியாக ஏன் என்று கேட்ட காம்ரேடுகள் ஊட்டி உல்லாச வாழ்வு ஏனென்று கேட்கவில்லையே? ஏன்?**

முன்னது தந்தையர் நாட்டுப் பிரச்னை-அங்கேயுள்ள உடன் பிறந்தார்களின் உழைப்பும் ஊதியமும் மன்னர்களின் இன்ப வேட்டைக்குப் பயன்படக்கூடாது! தமிழகம் கம்யூனிஸ்ட்களுக்குப் பிழைக்க வந்த நாடுதானே என எண்ணிக்கொண்டு ஊட்டிக்குப் போகிருர்கள். காங்கிரஸ் கட்சிக்குத் தமிழ்நாட்டு மக்களின் வரிப் பணத்தைக் கொட்டித் தருவதற்குத் தலையாட்டியிருக்கிருர்கள். பொதுவாகப் பாட்டாளிகளைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள்!

★

**வல்லராசன், சென்னை.**

**கழகத் தலைவர்கள் மக்களைப் போராட்டம் நடத்தத் தூண்டிவிட்டுத் தாங்கள் மறைந்துகொள்ளும் தன்மை படைத்தவர்கள் என்று கம்யூனிஸ்ட் பாப்பா கூறுவது ஏன்?**

இந்தப் பாப்பாத் தோழியருக்கு (ஜீவானந்தம் நடையிலே சொன்னுல் தோழர் பாப்பாவுக்கு) கம்யூனிஸ்ட்களின் கடந்த காலத்துக் கதைகள் தெரியாது போலும்! கழகத் தோழர்கள் கிளர்ச்சி நடத்தினுல் தலைவர்கள் அதிகார வர்க்கத்தின் பிடியிலே சிக்கிச் சிறையிலே நிற்பார்கள்! மக்கள் சூழ்ந்து நிற்க தண்டவாளத்தில் தடையாகத் தன்னை விழ்த்திக்கொண்ட கலைஞர் கருணநிதி "வெற்றி ஊர்வலம் அல்லது கருணநிதியின் பிண ஊர்வலம்" என்று முன்னணியில் நின்ருர்! மக்களைப் பின் நிறுத்தி, தான் முன் நின்று வெறி பிடித்த அதிகாரியின் 'பூட்ஸ்கால்' உதையை தான் நெஞ்சிலே தாங்கிக்கொண்டவர் கண்ணதாசன்! வெற்றி பெற்ற கல்லக்குடிப் பெயர் மாற்றம் இன்றில்லையென்ருல் அதற்குக் காரணம் டில்லிக்குக் கிடைத்துள்ள கருங்காலிகள்! சென்ற ஆண்டு நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டும் படை திரட்ட முன் நின்றவர் அறிஞர் அண்ணு. அவரைப் பின் தொடர்ந்தோர் சம்பத், கருணநிதி, அரங்கண்ணல், செழியன்! கூண்டிலடைக்கப்பட்டனர் அத்தனை தலைவர்களும்! நேருவின் புன்னகை ஒளிவிட்ட எழில் வதனத்தை, இசை வாணிகளின் அசைவுகளுக்கு அருகதை பெற்ற அழகு பிம்பத்தை, 'சுட்டுப் போட்ட கத்தரிக்காய்' ஆக்கியவர்கள் சிற்றரசு, மதுரை முத்து, மனேகரன்! அவர்கள் பின்னே சென்னை மக்கள்! மொழிப் போராட்ட காலத்தில் கருவுற்றிருந்தும் செருக்களம் சென்ற அன்னை-சத்தியவாணி, அவர்களைத்தான் காட்டிலே விட்டு வந்தார்கள்! தொண்டர்களுக்கு மத்தியிலே அடிபட்டுச் சாய்ந்தவர் அறிஞர் அப்பாத்துரை! ஆனல் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள்தான் பொதுமக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு புகலிடம் தேடிக்கொண்டார்கள் மறைவிடங்களிலே! போராட்டத்திலே முன்னணியில் நின்றவர் மணலி சி. கந்தசாமி என்ருல் சென்னை சர்க்கார் அவரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு பரிசு கொடுக்கப்படும் என்று அறிவித்தது ஏன்? பஞ்சாங்கத்து அய்யர் பச்சை முஸ்லீம் வேடம் போட்டு நாடோடியாக ரயில்வே நிலயத்தில் பிடிபட்டார் என்ற செய்தியைத் தந்தது யார்-ராமமூர்த்தி அல்லவா? ஏன் மக்கள் முன் நிற்கவில்லை? ஏன் ஒளிந்து கொண்டார்? ஜீவானந்தம் மக்களுக்கு முன்னே நின்று பணியாற்ருமல் காட்டிக் கொடுத்துவிட்டு ஓடவில்லையா? பாப்பாத் தோழியருக்கு இந்தப் பழைய சேதி தெரியாதா? ஜீவானந்தமும், ஏ. கே. கோபாலனும் தலைமறைவு வாழ்க்கையில் இருந்தபோது தன்னை அடிக்கடி சந்தித்து உதவிகள் பெற்றுக்கொண்டதாக இரு கிழமைகளுக்கு முன்னுல் "மூலதனம்" என்ற நாடகத்திற்குத் தலைமை வகித்த டி. கே. சண்முகம் சொன்னது பொய்யா மெய்யா என்பதையும் பாப்பா கேட்கட்டும்! "மக்கள் முன்னே சென்ற" தலைவர்கள் திருட்டுச் சதிவழக்குகளிலே சிக்கிகொண்டு இன்னும்கூடக் கம்பிகளை எண்ணிக்கொண்டிருப்பதன் பொருள் என்ன? வெட்கத்தையும் மானத்தையும் காங்கிரஸ் சர்க்காரின் காலடியில் காணிக்கையாக வைத்துவிட்டுச் சிறையிலே இருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று விண்ணப்பங்களை நீட்டியிருப்பது யார்? பொய்க் குற்றங்கள் என்ருல் உயர் நீதி மன்றங்களில் ஏன் நல்ல தீர்ப்பு வேண்டிப் பெறவில்லை? தமிழே பேசத் தெரியாத பார் அட்லா ஜமீன்தார் மோகனைக் கட்சிக்குக் கட்டணமில்லாத வக்கிலாக வைத்திருக்கும் கம்யூனிஸ்ட்கள் தாங்கள் புனிதமான மக்கள் தொண்டர்கள் என்று நிலைநாட்டத் தவறியது ஏன்? இந்தக் கொள்கைக் குழப்ப வெள்ளத்திலே மிதக்கும் பாப்பாக்கள் பரிதாபத்துக்குரியவர்கள். கழகத் தலைவர்களின் செயல் என்ன என்பதைத் தெரியாதவர்கள்! போராட்ட காலங்களிலே ஓடி ஒளிந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள், இப்போது பழைய கதையை மறந்துவிடுங்கள் என்று சொல்லுவது பாப்பாத் தோழியருக்குப் புரியுமா?

★

**கோ. பழனியப்பன், கோவை; நடராசன், நெல்லை.**

**'ஒரே வழி' திரைப்படத்தில் அண்ணு பேசும் காட்சியை இணைத்தது கண்டிக்கத் தக்கதென 'ஜனசக்தி' விமர்சனம் செய்தது ஏன்?**

அறிஞர் அண்ணு அவர்களை தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் தலைவர்களும் 'ஜனசக்தி' ஆசிரியரும் நன்ருகப் புரிந்துகொள்ளவில்லை என்பதைத்தான் இந்தச் செயல் காட்டுகிறது. மற்றத் தலைவர்கள் பேசுவதைத் திரையிலே காணும்போது ஏற்படாத மகிழ்ச்சி மக்களின் கையொலியில் அறிஞர் அண்ணு அவர்கள் வரவேற்கப்படும் காட்சியின்போதுதான் பொதுமக்களிடையே தென்படுகிறது! கோபப்பட்டுள்ள கம்யூனிஸ்ட்கள் மேலும் கோபப்பட்டுக் கொண்டாலும் கவலையில்லை என்ற கருத்தில் சொல்கிறேன், அடுத்த வீட்டு மலடியொருத்தி அண்டை வீட்டுக்காரியின் பிள்ளைக்கனியமுதைப் பார்த்துவிட்டு அம்மிக்கல் கொண்டு குத்திக்கொண்டாளாம். "அய்யோ" என்று அலறினுளாம்! ஜனசக்திக்காரர்களின் தீர்ப்பு தரும் உள் எண்ணம் இதுவாகத்தான் இருக்க முடியும்! எட்டையபுரத்து பாரதி விழாவில் ஜீவானந்தம் பேசியதை வானெலியில் ஒலிபரப்பவில்லை என்று இன்றுவரையிலும் அழுகுரல் எழுப்புபவர்கள் அண்ணுவைப் படத்தில் காட்டியது கண்டிக்கத் தக்கதென்கிருர்கள்! ஒரே வழியில் அறிஞரின் சொல்வழியும் இருக்க வேண்டுமென்று விரும்பிச் சேர்த்தார்கள். துடிப்புள்ள கம்யூனிஸ்ட்கள் கேட்கலாம் ஏன் எங்கள் ஜீவாவைக் காட்டியிருக்கக் கூடாதென்று? என் சுருக்கமான பதில்: திருச்சி வானெலி நிலயத்தினர் ஜீவானந்தம் பேச்சு ஒலிபரப்ப லாயக்கற்றதென்று கருதிவிட்டது போலவே ஒரே வழி எனும் நல்வழி காட்டியவர்கள் அவர் திரையிலே காட்டப்படுமளவுக்கு தரம்பெற்றவர் அல்ல என்ற உண்மையை உணர்ந்தவர்களாக இருக்கலாம்! இதற்காகக் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப் பத்திரிகை அறிஞர் அண்ணு அவர்களைப்பற்றி அவலமொழி தருவது அழகல்லவே! திரையிலே தோன்றவேண்டும் என்ற ஆசையைக் குறைத்துக்கொள்ள ஜனசக்திக்காரர்களுக்கு முடியவில்லையென்ருல் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களையெல்லாம் நடிக்கச் செய்து படம் எடுக்கவேண்டும்! திரைக்கதை வசனம் பாடல்களுக்கு ஒருவர் இருக்கிருர். கதாநாயகி வேடத்திற்கு, சட்டசபை மாறுவேடப் போட்டியில் "ஆங்கிலோ இண்டியன் லேடியாக" வந்த ராமமூர்த்தி இருக்கிருர். கதாநாயகனுக்கு இண்டெஸ்கி வெங்கட்டராமன் அவர்களை அழைத்துக்கொள்ளலாம்! அண்ணுவின் உருவம் கண்டு கண்டிக்க முன்வந்த ஜனசக்திக்காரர்களுக்குப் பெட்டி படுக்கை கூஜாத் தூக்கும் 'பாத்திரங்களை'க் கொடுக்கலாம்!

— 2 ம் பக்கத் தொடர்ச்சி —

# ஆசைப்பட்டு விழி வீசியோர் அவதிப்பட்டு வாடுவதேன்?

கழகம்-கம்யூனிஸ்ட் கட்சி அடிப்படையில் எந்த ஒரு முடிவினையும் மேற்கொள்ள வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த நேரத்தில் கம்யூனிஸ்ட்கள் மட்டுமேதான் முன்னின்றார்களே தவிர, கல்யாணசுந்தரங்கள் சொல்வதுபோல மற்றக் கட்சிக்காரர்கள் எவரும் தலைகாட்டவில்லை. காரணம், கம்யூனிஸ்ட்கள் கழகத்தை எதிர்க்கும் வரை தாங்களும் துணையாக நின்றார்கள், இரு பகுதியினரும் ஒன்றுபடும் நேரத்தில் இடையிலே நின்றால் இடிபட்டும் மிதிபட்டும் இருக்குமிடம் தெரியாமல் மறைக்கப்பட்டு விடுவோம் என்று கருதித்தான் ஒதுங்கிவிட்டார்கள்! கூட்டுக்குழுவின் அறிக்கையில் ஒரு பகுதி "ஆயிரம் பீடிகளுக்கு ரூ. 1-14-0 கூலி விகிதத்திற்கு முதலாளிகள் ஒத்துக்கொண்டால் அவர்களிடம் ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கமும், சுருட்டுத் தொழிலாளர் சங்கமும் தனித்தனியே ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்றும், வேறு ஏதாவது செய்வதாக இருந்தால், கருணாநிதி - கல்யாணசுந்தரம், அல்லது அன்பில் தர்மலிங்கம் கம்யூனிஸ்ட் எஸ். இராமசாமி ஆகியோர் கலந்து பேசியே தீர்வு காணவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது." 25-9-58 பொதுவேலை நிறுத்த நாளாக மதிக்கப்பட்டதும், தெரிவிக்கப்பட்டதும் அப்போதுதான்! சென்னை சென்ற நாவலர் நெடுஞ்செழியன்-கருணாநிதி இருவரும் திரும்பவும் திருச்சி வருவதற்கு முன்பே வேலை நிறுத்தம் இல்லையென்று கம்யூனிஸ்ட்கள் முடிவெடுத்து விட்டார்கள்! "தோழர் கல்யாணசுந்தரம் எங்களைச் சந்தித்து தொழிலாளர் கூலி விகிதம் ரூ. 1-10-0 என்பதாகக் கலெக்டரிடம் தான் சம்மதம் தந்துவிட்டதாகவும், ஹர்த்தாலைக் கைவிடுமாறு அறிவிப்புக் கொடுத்துவிட்டதாகவும், 'இன்று வெற்றிவிழா'க்கொண்டாடுவதாகவும் குறிப்பிட்டார். நாங்கள், எங்களைக் கலக்காமலே தோழர் கல்யாணசுந்தரம் செய்துகொண்ட ஒப்பந்தத்தைக்கேட்டு வியப்படைந்தோம்" இது, நாவலரும், கலைஞரும் தந்துள்ள அறிக்கையின் ஒரு பகுதி! பேச்சுவழக்கிற்கு மாறுபட்டு தங்கள் தனிவழி சென்றுவிட்ட கம்யூனிஸ்ட் கல்யாணங்கள் கழகம் துரோகம் செய்துவிட்டதென்று பேசுவது நகைக்கத் தக்கதாகும்! தொழிலாளர் கோரிக்கை ரூ. 1-8-0 கூலி ரூ. 2-4-0 ஆகக் கிடைக்கவேண்டுமென்பதாகும்! கம்யூனிஸ்ட்களின் ஒப்பந்தப்படி கூலி ரூ. 1-10-0 ஆக்கப்பட்டது. இரண்டணாக் கூலி உயர்வு கம்யூனிஸ்ட்கள் முதலாளிகளின் காலடிகளில் வீழ்ந்துவிட்டார்கள் என்பதற்கான முன்னறிவிப்பே தவிர முன்னேற்றக் கழகத்தின் துரோகத்தை எடுத்துக்காட்டும் ஆதாரமல்லவே! இந்தப் போராட்டம் வெற்றியோடு முடிந்துவிட்டதாகக் களிப்படையும் கல்யாணசுந்தரம் சொல்கிறார் முன்னேற்றக் கழகம் தன் தவறை உணர வேண்டுமென்று! இந்த உண்மையை வெளியிட்ட பொதுச்செயலாளர் அறிக்கையைத்தான், கலைஞரின் திருச்சிப் பொதுக்கூட்டச் சொற்பொழிவைத்தான், கம்யூனிஸ்ட்கள் அவதூறு என்கிறார்கள்! தொழிலாளர் நலன் பேசியவர்கள். காட்டிக் கொடுத்தவர்கள் என்பதை அறிக்கையில் தெரிவித்தது எப்படி அவதூறாகி விடும்?

திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் கம்யூனிஸ்ட்களின் குட்டுக்களை உடைக்கும் பணியில் வெற்றியைப் பெற்று வருகிறது. மற்ற கட்சிக்காரர்களை தன்னுடன் சேர்த்துக்கொள்ளும் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் விபசாரத்திற்கு கழகம் இணங்க மறுத்துவிடுவதினாலேதான் பீடித் தொழிலாளர் பிரச்னையிலே மட்டுமல்ல, எந்த ஒரு பொது நிகழ்ச்சியிலும் முன்னேற்றக் கழகம் என்றால் கம்யூனிஸ்ட்களுக்குப் பொறுப்பதில்லை! கழகம் தொழிலாளர்களையும், விவசாயிகள் போராட்டங்களையும் காட்டிக் கொடுப்பதாகவும், நேரடியாக எதிர்ப்பதாகவும் குற்றம்சாட்டுகிறார் ரெயில்வே வட்டாரத்து எம். எல். ஏ! நங்கவரம் போராட்டத்தில் கருணாநிதி தலைமையேற்று நடத்தினார். கம்யூனிஸ்ட்களுக்கு மட்டுமே சொந்தமாகக் கருதப்பட்ட பகுதி கலைஞரின் தலைமைக்குச் சென்றுவிட்டதை எண்ணி எண்ணி ஏங்குகின்ற கல்யாணசுந்தரம், அந்தப் போராட்டத்தினால் பலன் இல்லை என்கிறார். இந்தப் புரட்சித் தலைவரும்தான் ஒரு பெரும் போராட்டத்திலே நின்றார். அதிலேயாவது வெற்றியென்று துணிந்து சொல்லத் துணிவு வரவில்லை. ஆனால் நங்கவரத்திலே நல்ல பலனில்லையாம்! மீண்டும் அங்கே இப்போதுள்ளதைவிட நல்ல பலன் பெறக் கல்யாணசுந்தரம் தலைமையிலே படைசெல்லத் தயாராக இருக்கிறதா? கலைஞர் சாதிக்காத காரியத்தைக் கம்யூனிஸ்ட் தலைவர் சாதிக்கமுடியுமா? கலைஞர் தன் முயற்சியிலே வெற்றி பெற்றார் என்பதைக் களங்கப்படுத்தும் கல்யாணசுந்தரம். "நங்கவரத்தில் கருணாநிதி தலைவரா? கல்யாணசுந்தரம் தலைவரா என்ற கிளர்ச்சி நடைபெறுகிறது" என்று காமராஜர் கணக்கிட்ட முறையிலே இன்னும் கணக்கிட்டு வருவது பாட்டாளி வர்க்கத்தின் இணைபெற்றிராத தலைவன் என்ற மகுடத்திற்கு அவரை லாயக்குள்ளவராக்கிவிடாது! பீடித் தொழிலாளர் பிரச்னையில் நம்பியாரின் உண்ணா விரதத்தையும் கல்யாணசுந்தரம் நினைக்கிறார். அதனைக் கழக ஏடுகள் இழிவுபடுத்துவதாகத் தெரிவிக்கிறார்! உண்ணாவிரத மகிமை பேசுகின்ற கம்யூனிஸ்ட்கள், அதனால்தான் டில்லி சர்க்கார் அசைந்ததாகத் தம்பட்டம் தட்டுபவர்கள், கழகம் கணக்கிட்ட முறைகளை நன்றாகச் சிந்தித்துப் பார்த்துவிட்டுப் பேசுவது நல்லது. காந்தியாரின் உண்ணாவிரதங்களைக் கண்டித்த பி. ஸி. ஜோஷிக்கள் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார்கள். அந்த ஜோஷியின் சீடர்களான அனந்தன் நம்பியாரும், கல்யாணசுந்தரமும் உண்ணாவிரத போர்டு மாட்டிக்கொண்டது ஏன்? நேருவின் புன்னகையை நேரிலேகூட அல்ல கடிதத்திலே கண்டவுடன் கடையை மூடிக்கொண்டதும் ஏன்? ஆண்டிகளும், பண்டாரங்களும் உண்ணாவிரதம் பயனற்ற கருவியென்று உதறிவிட்ட பிறகு புரட்சிப் பட்டாளத் தலைவர்கள் உண்ணாவிரதமென்று விளம்பரப்படுத்தியது ஏன்? இவைகளுக்குச் சமாதானமும் விளக்கமும் தெரிவிக்காதவர்கள் பீடித் தொழிலாளருக்குத் துரோகம் செய்துவிட்டதாகப் பேசும்போதே நம்பியாரையும் அழைத்து வந்து நாக்குழறக் குமுறுவது ஏன்? தமிழன் என்று பெருமைப்பட்டுக் கொள்கின்றவர்கள் உண்ணாவிரத மகிமையை மார்க்கிச லெனினிச கருத்துகளிலே காட்டிவிட முடியுமா?

திராவிட முன்னேற்றக் கழகம் தொழிலாளர்கள் வாழ்க்கையைத் தன்னுடைய வளர்ச்சிக்காகப் பலியிட்டுக் கொண்டதில்லை! உள்ளத்தாலும் உழைப்பாலும் அவர்கள் வாழ்வு உயர வேண்டுமென்று எண்ணுபவர்கள்! கழகம் சினிமாக் கதைகளில் பாட்டாளிகளைப் பற்றி எழுதுவதும் பாடுவதும் உலகோர் அறிந்த உண்மை. கம்யூனிஸ்ட்களுக்குக் கலைஉலகம் கைகொடுப்பதில்லை. கல்யாணசுந்தரங்களின் கதை வசனம் பாடல்களுக்காக எவரும் காத்திருப்பதில்லை! இந்த வயிற்றெரிச்சல் காரணத்தால் கழகத்தவர் 'பணம் பறிக்க' எழுதுகிறார்கள் என்று அடிவயிற்றைப் பிசைந்து கொள்வதில் போராட்டத் தலைவருக்குள்ள உயர்லட்சணங்கள் தென்படவில்லை! கல்யாணசுந்தரங்களுக்கு, கருத்துக்களை-கலையுலகம் போற்றும் அலங்காரச் சொற்களைத் தருகின்ற தகுதியில்லையென்றால் மற்றவர்களைத் தூற்றுவது எந்த வகையில் பலன் தரப்போகிறது? கலைஞர் அவர்களை எழுதச் சொல்லிக் கல்யாணசுந்தரம் பெயரிலா படம் வெளியிடமுடியும்? இல்லையென்றால் இலக்கிய மேதையவர்கள்தான் கலைஞருக்குப் போட்டியாகக் கலையுலகிலே புகுந்து கதை-வசனம் அமைக்கத் துணிவுண்டா? இதனைச் செய்யாமல் திரையிலே சொல்லி பணம் பறிக்கிறார்கள் என்று வெட்கத்தைவிட்டு, வேதனையைக் காட்டுவது கடைந்தெடுத்த பிற்போக்குத்தனமென்போம்! மாறனுக்கெதிராக முகவை ராசமாணிக்கமென்றுவது நீங்கள் தெரிவிக்கத் தயாரா? கலையுலகில் நீங்கள் கழகத்தவருடன் தகுதி திறமை பேசுவதற்கு எந்தப் பகுதியிலும் எவரைக் கொண்டுவந்து நிறுத்தினாலும் கம்யூனிஸ்ட்கள் லாயக்கற்றவர்கள் என்பது நிரந்தர-முடிவெடுக்கப்பட்ட உண்மையாகும்! திராவிட முன்னேற்றக் கழகத்தினர் உரிமைப் போராட்டங்களில் கம்யூனிஸ்ட்களின் கருங்காலிச் செயல்களை எதிர்த்துக் கூறுகின்ற காரணத்தால் கழகம் ஊசலாடுவதாகக் கல்யாணசுந்தரம் சொல்கிறாரா? எல்லாம் வல்ல கம்யூனிஸ்ட் கர்மவீரர்கள் கழகம் எதிர்ப்பதால் எந்தப்பகுதிப் பாட்டாளி வர்க்கமாவது பங்கப்பட்டதென்று சான்று காட்டமுடியுமா? நாசவேலைகள் நடைபெற்றதாகத்தான் நவில இயலுமா? முன்னேற்றக் கழகத்தின் பின்னே அழகு நடையிலும் பல்லாயிரக்கணக்கானவர்களைப்பீடித்தொழிலாளர் பிரச்னையை எடுத்துச் சொல்லிக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இழுத்துச் சென்றுவிடலாம் என்று கனவு காண்பது 'அணிப்'பிள்ளைப் பாசத்தை வளர்ப்பதுபோலாகும்! ஒப்பந்தத்தை மீறியவர்கள் கல்யாணசுந்தரங்களும் கம்யூனிஸ்ட்களும். ஆனால் பழி தூற்றுவது கழகத்தோழர்களை! அத்துடன் திருந்தவேண்டும் என எச்சரிக்கைகள் தருவது எத்தர்களின் செயலாகும்! முன்னுரை தந்த பேரறிஞர் கல்யாணம் சொன்ன செய்திகள் இப்படியென்றால் புத்தகம் எழுதியிருக்கும் "காம்ரேட்" தோழரின் வார்த்தைகளுக்கு அளவில்லை! கழகத்தின் இலட்சியங்களையெல்லாம் கண்டித்துவிட்டார். திருச்சிநகரத்துச் செயல்களை வைத்துக் கொண்டு அந்தப் போராட்டவீரன் கழகத்தலைவர்களை மதிப்பிடுகிறார். மட்டரகமான வார்த்தைகள்தான் என்றாலும் மறுக்க முடியாதவைகள் அல்ல. துரோகக் கும்பலிலே முதலிடம் பெற்றிருக்கும் அவரின் கட்டுரையையும் மற்றொரு சமயம் கணக்கிடுவோம்!

-கூடலரசன்



# விருத்தப் போட்டி

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
தித்திதத் தத்தை தீத
தைத்ததுத் தத்து தொத்தி
துத்துத்து துதொத் தித்து
தைத்ததத் தத்தி தத்தி
தித்திதத் தை(த்)தை தை(த்)தை
தத்திதத் திதத்தை தத்தா.
—"எழில்", ஏரிப்பாக்கம்.

★

வித்தைகள் கற்றுப் பார்த்தேன்
விரிபொருள் ஈட்டிப் பார்த்தேன்
முத்தமிழ் சுவைத்துப் பார்த்தேன்.
முதிர்சுவை யாவும் துய்த்தேன்
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
இத்தரை மீதில் எங்கும்
எதுவுமே கொடுத்த தில்லை.

★

—ச. இராமசாம், கயற்கண்ணிபுரம்.

இத்தரை மீது நன்கு
இன்னரும் இயற்கைச் சிற்பம்
வித்தகர் நாடிச் செய்ய
வேல்விழி வியக்கும் வண்ணம்
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
சித்திர மாது முல்லை
சிந்தனைச் சிரிப்பைச் சிந்தும்!
—ச. அமுதன், திருவில்லிபுத்தூர்.

★

தித்தத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
சித்தனும் கிழவன் என்னைத்
திறன்மிகு இளைஞன், மேலும்
பித்தனுய் மாற்றி என்னை
பிணைத்ததே இன்பத் தாம்பில்
முத்தமா யிரங்கள் இட்டேன்
முடிந்தது. அழுதாள! பேத்தி!
—மணிவண்ணன், திருமங்கலம்.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
புத்திதழ் மாது வைத்த
பூவிதழ் முத்தந் தானே!
சத்திதழ் கோதை சோய்த்த
சுரிகுழல் வாசந் தானே!
தத்திதழ் குழவி சிந்தும்
தேம்பிழி மழலை தானே!
—பி. தேவ அரசு, திருச்சி-3.

★

தத்திதத் தூது தொத்தி
தைத்ததத் தாதி தொத்தி
தித்திதத் தேது தத்தி
தித்திதத் தாது தூது
தித்திதத் தாதை தோத்து
தித்தித் ததைை துதித்தே
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்.
—காட்டுலிங்கல் காட்டுப்பாளையம்.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
தைத்தது மாதே இந்நாள்
கவின்பெறு தமிழ்ச்சு வையால்
புத்திரம் கொண்ட நெஞ்சம்
பெற்றிட ஓது கின்றேன்
நித்தமும் "அம்பு றத்தை"
நீபடி! எதுவும் வேண்டாய்.
—மு. வரதராசன், துறையூர்.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
கொத்துடை மாவின் சத்தும்
கொங்குடை பலாவின் இனிப்பும்
வித்தகர் ஏத்தும் கல்வி
விரவிட அமைத்த பண்பும்
ஒத்ததே ஆகும் நண்பா!
உயிரினை வளர்க்கும் நித்தம்
—பி. எஸ். வேலாயுதம், சென்னை-5.

புத்தரின் பாதை சென்றால்
மெத்தவும் அமைதி இன்பர்;
முத்தமிழ் நாடு காத்தால்
முடிவிலா உயர்ந்த இன்பர்;
மத்திய டெல்லி ஆட்சி
முற்றிலும் மாற்றி விட்டால்.
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்.
—ரெ. நாரணன், திருவில்லிபுத்தூர்.

★

மத்தொலி இசையின் இன்பம்,
மாதுளை முத்தின் இன்பம்,
கொத்திய கொவ்வை இன்பர்,
கூடிடா பாட்டின் இன்பம்,
தத்தையின் நாவும் பல்லும்
தந்திடும் தமிழின் இன்பம்,
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்.
—க. இராமசாமி, ஆயப்பாடி.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்;
மெத்தையில் உடல ணைத்து
மெல்லென் விளக்க ணைத்து.
முத்தமே முதல ளித்து.
முடிவினில் பரிச ளித்த
அத்துணை இன்பந் தன்னை
அகத்தினில் எழுப்பு(ம்) மாதோ!
—அரி. 'மதி' திண்டிவனம்.

★

நத்தையால் நண்டாய் ஊர்தல்
நாட்டியம்! நல்லாள் பாடும்,
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்.
புத்தொளி நிலவு வீட்டில்
புரண்டிடக் கண்ட இன்பம்!
நித்தமும் நிகழ்வ தாலே
நீண்டிடும் நல்லோர் நட்பாய்
—சி. வீ. இராசாராம், திருமங்கலம்

★

பித்தரின் சித்த மாக்கும்
பேர்பெறு பருவம் உந்த
முத்தமும் வித்தும் தந்து
முத்திரைப் பதித்து விட்டு
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
எத்தனை வாட்டு தென்று
இன்கவி எழுதல் நன்றோ?
—அநந்தநி, அமிர்தராயன்கோட்டை.

★

முத்தமிழ் மொழியைப் போலும்
முழுமதி இரவைப் போலும்
பொக்கைவாய்க் குழந்தை பேசும்
பூந்தமிழ் மழலை போலும்
இத்தரை மீது சூழும்
இடரெலாம் மறக்கச் செய்யும்
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்.
— குகன் குருசாமி, கமுதி.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
நித்திரை செய்யும் போதும்
நினைவினில் நீங்கா தோங்கும்
சித்தமோர் இன்ப வானிற்
சிறக டித்தே பறக்கும்
இத்தகு இன்பம் ஒன்றிங்(கு)
இல்லையேல் வாழ்வு ஏது?
—தி. ந. கோவிந்தராசன், திருச்சி-1.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
நித்தமும் காணப் பெற்று
நெஞ்சினிற் களிப்புப் பொங்கப்
பத்தினிப் பாவை யன்னுள்
பரிவுடன் மகவைத் தாங்கி
முத்தமும் ஈந்து நெஞ்சில்
முத்தமிழ்ச் சுவையைக் காண்பாள்;
—"தாரையூரான்", தாராபுரம்.

"செத்தது காளை மாடு;
சென்னையில் உதய சூரியன்!"
மெத்தநல் லின்பச் சேதி
மெல்லியவள் விளைத்து பின்னர்
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
எத்துணை பெரிதென் றாலும்
ஈடதற் காமோ நெஞ்சே?
—அழகம்மாள் செல்லமுத்து,
திருக்கோகர்ணம்.

★

பத்தினி போட்ட சோற்றை
பிஞ்சுடை விரலால் கிண்டி
நித்திரை செல்லும் போதும்
நற்றமிழ் மழலை பேசி
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
முத்திரை வைக்கும் வாழ்வில்;
முத்தியும் வேறு உண்டோ?
—ஒ. வி. சிவலிங்கம், பொன்னேரி.

★

தத்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
நித்திரைப் போழ்தும் என்றன்
நெஞ்சினில் உறைந்த தங்கே!
கத்திடும் ஆழி முத்தே!
கனவினில் வந்த தாலே
பித்தனைப் போல வாயும்
பிதற்றியே அலைய லானேன்.
—முத்துதாசன், தஞ்சை.

★

ஒத்தவர் தம்முள் சாதி
ஒன்பது வகைபி ரிக்கும்
சித்திரர் தோன்றி வாழ்வில்
சிக்கலை விளைத்த போதும்
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
எத்தரின் போக்கை நேரில்
எதிர்த்துமே வாழக் கண்டீர்!
—சி. பி. சாமி. திருப்பத்தூர்.

★

கொத்தலர் காவிற் போந்து
கொழுமலர்த் தீந் தன் உண்டு,
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
நித்திரைக் காட்சி யாமோ!
நீர்க்குமிழ் நிலையே தானோ?
நித்தமும் நைந்தேன் எண்ணி;
நீயவட் குரைப்பாய் சென்றே.
—ச. சிவாஜி, புதுக்கோட்டை.

★

தித்திக்கும் காதல் வாழ்வை
சித்திரப் பாவை யோடு
எத்தரின் பேச்சைத் தாங்கி
எழிலுறக் கண்டோர் வாழ்வில்
சத்தினைச் சேர்க்க வென்றே
சதிபதி பெறவே பிள்ளை
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்,
—தமிழ்மாறன், சென்னை-1.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
தத்துரை யாடும்; இன்பத்
தமிழ்மணம் கூடும்; காதற்
சொத்திதென் றுணரா ரன்றோ
சுடுபொடி மணலைப் பூசிப்
பித்தராய்ச் சிவனை வேண்டிப்
பெறுவதோர் வரமுன் டென்பார்!
—மா. இளங்கீரன், தனி.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
கொத்திடும் பார்வை; உள்ளக்
கொடுநிலை அகற்றி; அன்புச்
சித்தியை விளைத்து; மற்றும்
சிறுநிலை அழித்து; மக்கள்
மத்தியில் மாண்பாய் என்னை
மனிதனுய் ஆக்கிற் றம்மா!
—இராம. கணபதி, அரிமழம்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.